# போர்ட் ஸெயின்ட் ஜார்ஜ் கெஜெட்

## IV-வது பாகத்தின் ஸப்ளிமென்ட்

## SUPPLEMENT TO PART IV OF THE FORT ST. GEORGE GAZETTE,

FEBRUARY 21, 1922.

ந. 4.] மதராஸ் : செவ்வாய்க்கிழமை மாலை, 1922-ம் ஞு பெப்ரவரி மீ 21உ. [விலை, 1 அ. 3 பை

## சென்னை கவர்ன்மென்ட் மசோதா ஆக்ட்

# BILL OF THE GOVERNMENT OF MADRAS.

சட்டதிட்டங்கள் செய்வதற்கான சென்னபட்டணம் கவர்னரவர்களின்
ஆலோசனை சபையில் கொண்டுவரப்போகும் மசோதா ஆக்ட்.

---

சென்னைச் சட்டநிரூபண சபையில் வேலை நடந்தேறுவதைக்குறித்த விதிகளைச் சேர்ந்த 18-வது விதியின்படி, அடியிற்கண்ட மசோதா ஆக்டும் அதன் ஹேதுக்களும் நோக்கங்களும் அடங்கிய சூசிகையும் யாவர்க்கும் தெரியும்படி பிரசித்தஞ்செய்யப்படுகின்றன :—

### BILL No. 7 OF 1922.

### 1922-ம் ஞூத்து 7-வது மசோதா ஆக்ட்.

---

### A BILL TO AMEND THE INDIAN STAMP ACT, 1899, IN ITS APPLICATION TO THE PRESIDENCY OF FORT ST. GEORGE.

### 1899-ம் ஞூத்திய இந்துதேசத்து முத்திரைக்கடுதாசி ஆக்ட் சென்னபட்டணம் ப்ரெஸிடென்ஸிக்குப் பிரயோகப்படுகிறமட்டில் அதைத் திருத்துவதற்கான மசோதா ஆக்ட்.

---

பீடிகை.

1899-ம் ஞூத்து 2-வது ஆக்ட்.

சென்னபட்டணம் ப்ரெஸிடென்ஸியின் வருமானங்களை அதிகப்படுத்துவது யுக்தமாயிருக்கிறபடியாலும், அது காரியத்துக்காக ஷை ப்ரெஸிடென்ஸிக்குப் பிரயோகப்படுகிறமட்டில் 1899-ம் ஞூத்திய இந்துதேசத்து முத்திரைக்கடுதாசி ஆக்டை இதில் பின்னால் கண்டபடி திருத்துவது யுக்தமாயிருக்கிறபடியாலும், இதனால் விதிக்கப்படுகிறதென்னவென்றால் :—

சுருக்கமான பெயரும் வியாபகமும்.

1\. (1) இந்த ஆக்டை, 1922-ம் ஞூத்திய சென்னபட்டணத்து முத்திரைக்கடுதாசி (திருத்துவதற்கான) ஆக்ட் என்று சொல்லலாம்.

(2) இது - சென்னபட்டணம் ப்ரெஸிடென்ஸி முழுமைக்கும் வியாபிக்கிறது.

ஆக்டைப் பிரயோகிப்பது.

2. இதில் பின்னால் ஷை ஆக்ட் என்று குறிப்பிடப்படும் 1889-ம் வருஷத்திய இந்துதேசத்து முத்திரைக்கடுதாசி ஆக்டானது - சென்னபட்டணம் ப்ரெஸிடென்ஸிக்கு அது பிரயோகப்படுகிற மட்டில், இதில் பின்னால் நிபந்தனை கண்டிருக்கிறபடி திருத்தப்படும். 1899-ம் வருஷத்து 2-வது ஆக்ட்.

1899-ம் வருஷத்து 2-வது ஆக்ட் 2-வது பிரிவைச் சேர்ந்த (10) குறிப்பிட்ட பகுதியில் திருத்தம்.

3. ஷை ஆக்ட் 2-வது பிரிவைச்சேர்ந்த (10) குறிப்பிட்ட பகுதியில் "1-வது ஷெட்யூலில்" என்பதற்கு பர்த்தியாக "சந்தர்ப்பத்துக்கேற்றபடி "1-வது ஷெட்யூலிலாவது 1A ஷெட்யூலிலாவது" என்பதை அமைத்துக்கொள்ளவேண்டும்.

3-வதுபிரிவில் திருத்தம்.

4. ஷை ஆக்ட் 3-வது பிரிவில்,—

(1) (c) குறிப்பிட்ட பகுதிக்குப் பிறகு அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ளவேண்டும் ; அதாவது ;—

"ஆனால், இந்த ஆக்டில் வேறேவிதமாய் வெளிப்படையாக நிபந்தனை கண்டிருக்கிறபடிக்கன்றி மற்றப்படியும், இந்தப் பிரிவைச்சேர்ந்த (a), (b) அல்லது (c) குறிப்பிட்ட பகுதியிலாவது 1-வது ஷெட்யூலிலாவது என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலும், இந்த ஆக்டின் 1A ஷெட்யூலில் கண்டிருக்கும் தொகையானது - இந்த விலக்குநிபந்தனையின் (aa), (bb), (cc) அடையாளமிட்ட பகுதிகளில் சொல்லியிருக்கும் அடியிற்கண்ட ஆதாவுகளுக்கு ஷை ஷெட்யூலில் அடங்கியுள்ள விலக்குகளுக்குட்பட்டு முறையே இந்த ஆக்டின்படி விதிக்கத்தக்க சரியான தீர்வையாகும் ,—

(aa) முன்னமே யாதொரு நபரால் எழுதப்படாமலிருந்து, 1922-ம் வருஷம் எப்ரல் மாதம் முதல் தேதியிலாவது அதற்குப் பின்னிட்டாவது சென்னபட்டணம் ப்ரெஸிடென்ஸியில் எழுதப்படுகிறதாய் 1A ஷெட்யூலின்படி தீர்வை விதிக்கப்படத்தக்கதென்று அந்த ஷெட்யூலில் சொல்லியிருக்கிற பிரதி ஆதாவும் ;

(bb) 1922-ம் வருஷம் எப்ரல் மாதம் முதல் தேதியிலாவது அதற்குப் பின்னிட்டாவது சென்னபட்டணம் ப்ரெஸிடென்ஸிக்கு வெளியில் எழுதப்பட்டோ அல்லது செய்யப்பட்டோ இருந்து, அந்த ப்ரெஸிடென்ஸியில் தொகை செலுத்தப்பட்டாகிலும் தொகை செலுத்தப்படுவதற்காகக் காட்டப்பட்டாகிலும் இருக்கிற அல்லது எண்டார்ஸ் செய்யப்பட்டாகிலும் வேறொருவர் பெயருக்கு ட்ரான்ஸ்பர் செய்யப்பட்டாகிலும் வேறேவிதமாய்க் கைமாறிச் செல்லும்படி செய்யப்பட்டாகிலும் இருக்கிற கேட்கப்படுவதன்மேல் பணம் செலுத்தவேண்டியதாயிராத பிரதி ப்ராமிஸொரி நோட் அல்லது செக்கும் ;

(cc) முன்னமே யாதொரு நபரால் எழுதப்படாமலிருந்து, 1922-ம் வருஷம் எப்ரல் மாதம் முதல் தேதியிலாவது அதற்குப் பின்னிட்டாவது சென்னபட்டணம் ப்ரெஸிடென்ஸிக்கு வெளியில் எழுதப்பட்டதாயும், அந்த ப்ரெஸிடென்ஸியிலுள்ள யாதொரு சொத்துக்காகிலும் அந்த ப்ரெஸிடென்ஸியில் செய்த அல்லது செய்யப்போகிற யாதொரு விஷயம் அல்லது காரியத்துக்காகிலும் சம்பந்தப்பட்டதாயும், அந்த ப்ரெஸிடென்ஸியில் வரப்பற்றப்பட்டதாயும் (கேட்கப்படுவதன்மேல் பணம் செலுத்தவேண்டியதாயிராத ப்ராமிஸொரி நோட் அல்லது செக்கல்லாமல்) 1A ஷெட்யூலின்படி தீர்வை விதிக்கப்படத்தக்கதென்று அந்த ஷெட்யூலில் சொல்லியிருக்கிற வேறே ஒவ்வொரு ஆதாவும்."

(2) "ஆனால்" என்னும் வார்த்தைக்கு பர்த்தியாக "மேலும்" என்னும் வார்த்தையை அமைத்துக்கொள்ளவேண்டும்.

4-வது பிரிவில் திருத்தம்.

5. ஷை ஆக்ட் 4-வது பிரிவைச்சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவில்,—

(a) "முதலாவது ஷெட்யூலில" என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக "சந்தர்ப்பத்துக்கேற்றபடி 1-வது ஷெட்யூலிலாகிலும் 1A ஷெட்யூலிலாகிலும்" என்னும் வார்த்தைகளையும் இலக்கங்களையும் எழுத்தையும அமைத்துக்கொள்ளவேண்டும் ;

(b) "ஒரு ரூபாய்" என்னும் வார்த்தைகளுக்குப் பிறகு "அல்லது ஒரு ரூபாய் எட்டு அணா" என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும் ;

(c) "அந்த ஷெட்யூலில்" என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக "சந்தர்ப்பத்துக்கேற்றபடி 1-வது ஷெட்யூலிலாகிலும் 1A ஷெட்யூலிலாகிலும்" என்னும் வார்த்தைகளையும் இலக்கங்களையும் எழுத்தையும் அமைத்துக்கொள்ளவேண்டும்.

6-வது பிரிவில் திருத்தம்.

6. ஷை ஆக்ட் 6-வது பிரிவில், "1-வது ஷெட்யூலில்" என்னும் இலக்கத்துக்கும் வார்த்தைகளுக்கும் பர்த்தியாக "சந்தர்ப்பத்துக்கேற்றபடி 1-வது ஷெட்யூலிலாவது 1A ஷெட்யூலிலாவது" என்னும் வார்த்தைகளையும் இலக்கங்களையும் எழுத்தையும், "ஒரு ரூபாய்க்கதிகமாக" என்னும் வார்த்தை

களுக்கு பார்த்தியாக " சந்தர்ப்பத்துக்கேற்றபடி ஒரு ரூபாய்க்கு அல்லது ஒரு ரூபாய் எட்டணுவுக்கு அதிகமாக " என்னும வார்த்தைகளையும் அமைத்துக்கொள்ளவேண்டும்.

11-வது பிரிவில் திருத்தம்.

7. ஷை ஆக்ட் 11-வது பிரிவைச்சேர்ந்த (a) குறிப்பிட்ட பகுதியில் " ஆதாரவுகள் " என்னும் வார்த்தைக்கு பார்த்தியாக " ஆதாரவுகளும், 3-வது பிரிவைச்சேர்ந்த (aa), (bb) அல்லது (cc) குறிப்பிட்ட பகுதிகளின்படி இரண்டணு தீர்வை விதிக்கப்படத்தக்க (1A ஷெட்யூலைச் சேர்ந்த 14-வது பகுதியில் விவரிக்கப்பட்டபடிக்குள்ள பாண்ட் என்னும் பத்திரம் அல்லாத வேறே) ஆதாரவுகளும் " என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

புதிய 19A பிரிவு.

8. 19-வது பிரிவுக்குப் பிறகு அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ளவேண்டும் ; அதாவது :—

3-வது பிரிவைச் சேர்ந்த (bb) குறிப்பிட்ட பகுதியின் படிக்காவது (cc) குறிப்பிட்ட பகுதியின்படிக்காவது அதிகப்படுத்தப்பட்ட தீர்வைக்குள்ளாகக்கூடிய சில ஆதாரவுகளுக்குத் தீர்வை செலுத்துவது.

" 19A. சென்னபட்டணம் ப்ரெஸிடென்ஸியல்லாமல் ப்ரிடிஷ் இந்தியாவைச் சேர்ந்த வேறே யாதொரு பாகத்தில் யாதொரு ஆதாரவானது ப்ரிடிஷ் இந்தியாவைச்சேர்ந்த அந்த பாகத்தில் செலாவணியாய்க் கொண்டிருக்கிற முத்திரைக்கடுதாசியைக் குறித்த சட்டத்தின்படி தீர்வை விதிக்கப்படத்தக்கதாயிருந்து, அதற்குப் பிறகு 3-வது பிரிவைச்சேர்ந்த முதல் விலக்கு நிபந்தனையிற்கண்ட (bb) குறிப்பிட்ட பகுதியின்படியாவது (cc) குறிப்பிட்ட பகுதியின்படியாவது ஷை ப்ரெஸிடென்ஸியில் முன்னிலும் அதிகமாயுள்ள ஒரு வீதப்படி தீர்வை விதிக்கப்படத்தக்கதாகும் பட்சத்தில்—

(i) 3-வது பிரிவைச்சேர்ந்த முதல் விலக்கு நிபந்தனையில் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, ஷை ஆதாரவுக்கு விதிக்கப்படத்தக்க தீர்வைத்தொகையானது - 1A ஷெட்யூலின்படி அதற்கு விதிக்கப்படத்தக்க தொகையிலிருந்து ஏற்கனவே அதற்கு ப்ரிடிஷ் இந்தியாவில் செலுத்தப்பட்டிருக்கும் தீர்வைத்தொகை ஏதாவதிருந்தால் அதைக் கழித்துவிட்ட பிறகு ஏற்படும் தொகையாகும் ;

(ii) ஷை ஆதாரவில் ஏற்கனவே ஒட்டப்பட்டுள்ள முத்திரைகள் ஏவையேனும் இருந்தால் அவைகளுடன்கூட, அந்த ஆதாரவானது உயர்ந்த தீர்வை செலுத்தப்படத்தக்கதானபோது முதல்தடவையாய் பரிடிஷ் இந்தியாவில் வரப்பெற்றுக்கொள்ளப்பட்ட ஒரு ஆதாரவாயிருந்தால் அதற்கு எம்மாதிரியும் எந்தக்காலத்திலும் எந்த நபர்களாலும் முத்திரை யிடப்படுமோ அம்மாதிரியும் அதேகாலத்திலும் அதே நபர்களாலும் (i) குறிப்பிட்ட பகுதியின்படி விதிக்கப்படத்தக்க தீர்வைத்தொகையைச் செலுத்துவதற்கு அவசியமாயிருக்கும் முத்திரைகளைக்கொண்டு முத்திரை யிடப்படவேண்டும் ; மேலும்,

(iii) சந்தர்ப்பத்துக்கேற்றபடி 32-வது பிரிவைச்சேர்ந்த (3) குறிப்பிட்ட உட்பிரிவின் விலக்குநிபந்தனையிற்கண்ட (b) அடையாளமிட்ட பகுதியிலாகிலும் (c) அடையாளமிட்ட பகுதியிலாகிலும் கண்டிருக்கும் நிபந்தனைகள் - அவசியமான திருத்தங்களோடு ஷை ஆதாரவுக்குப் பிரயோகப்படும் ; ஆனால், ஷை விலக்குநிபந்தனையின் (a) அடையாளமிட்ட பகுதியில கண்ட நிபந்தனைகள் அதற்குப் பிரயோகப்படமாட்டா."

23-A பிரிவில் திருத்தம்.

9. 23-A பிரிவைச்சேர்ந்த 1-வது உட்பிரிவில் கண்ட (b) அடையாளமிட்ட பகுதியில் " 1-வது ஷெட்யூலைச்சேர்ந்த " என்னும் வார்த்தைகளுக்கும் இலக்கத்துக்கும் பார்த்தியாக "சந்தர்ப்பத்துக்கேற்றபடி 1–வது ஷெட்யூலையாகிலும் 1A ஷெட்யூலையாகிலும் சேர்ந்த" என்னும் வார்த்தைகளையும் இலக்கங்களையும் எழுத்தையும் அமைத்துக்கொள்ளவேண்டும்.

24-வது பிரிவில் திருத்தம.

10. 24-வது பிரிவில், "1-வது ஷெட்யூல் 18-வது பகுதியிற்கண்ட" என்னும் வார்த்தைகளுக்கும் இலக்கங்களுக்கும் பார்த்தியாக " சந்தர்ப்பத்துக்கேற்றபடி 1-வது ஷெட்யூல் 18-வது பகுதியிலாவது 1A ஷெட்யூல 17-வது பகுதியிலாவது கண்ட" என்னும் வார்த்தைகளையும் இலக்கங்களையும் எழுத்தையும் அமைத்துக்கொள்ளவேண்டும்.

29-வது பிரிவில் திருத்தம்.

11. 29-வது பிரிவைச்சேர்ந்த (a) குறிப்பிட்ட பகுதியில், " 1-வது ஷெட்யூலிலே " என்பதற்குமுன் " சந்தர்ப்பத்துக்கேற்றபடி " என்னும வார்த்தைகளையும், "பகுதிகளிலெதிலாவது" என்னும் வார்த்தைகளுக்குப் பிறகு " 1A ஷெட்யூலில் அவைகளுக்குப் பொருத்தமான பகுதிகளிலெதிலாவது" என்னும் வார்த்தைகளையும இலக்கத்தையும் எழுத்தையும அமைத்துக்கொள்ளவேண்டும்.

32-வது பிரிவில் திருத்தம்.

12. 32-வது பிரிவைச்சேர்ந்த (3) குறிப்பிட்ட உட்பிரிவின் விலக்குநிபந்தனையில் கண்ட (c) அடையாளமிட்ட பகுதியில் "ஆதரவாவது" என்னும் வார்த்தைக்குப் பிறகு அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ளவேண்டும் ; அதாவது :—

"3-வது பிரிவைச்சேர்ந்த (aa), (bb) அல்லது (cc) அடையாளமிட்ட பகுதியின்படி இரண்டு அணு தீர்வை விதிக்கப்படத்தக்க (1A ஷெட்யூலைச்சேர்ந்த 14-வது பகுதியில் விவரிக்கப்பட்டபடிக்குள்ள பத்திரமல்லாத வேறே) யாதொரு ஆதாரவாவது".

34-வது பிரிவில் திருத்தம்.

13. 34-வது பிரிவில், "ஒரு அணு" என்னும் வார்த்தைகளுக்குப் பிறகு "அல்லது இரண்டு அணு" என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

35, 40, 41 வது பிரிவுகளில் திருத்தம்.

14. 35-வது பிரிவின் விலக்கு நிபந்தனையைச்சேர்ந்த (a) குறிப்பிட்ட பகுதியில் "ஆதாரவும்" என்னும் வார்த்தைக்குப் பிறகு அடியிற்கண்ட வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்; அவையாவன:—

"3-வது பிரிவைச்சேர்ந்த (aa), (bb) அல்லது (cc) அடையாளமிட்ட பகுதியின்படி இரண்டு அணு தீர்வை விதிக்கப்படத்தக்க (1A ஷெட்யூலைச்சேர்ந்த 14-வது பகுதியில் விவரிக்கப்பட்டபடிக்குள்ள பத்திரமல்லாத வேறே) யாதொரு ஆதாரவும்";

40-வது பிரிவைச்சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவிலும் 41-வது பிரிவிலும் "ஆதாரவாகவாவது" என்னும் வார்த்தைக்குப் பிறகு அடியிற்கண்ட வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்; அவையாவன:—

"3-வது பிரிவைச்சேர்ந்த (aa), (bb) அல்லது (cc) அடையாளமிட்ட பகுதியின்படி இரண்டு அணு தீர்வை விதிக்கப்படத்தக்க (1A ஷெட்யூலைச் சேர்ந்த 14-வது பகுதியில் விவரிக்கப்பட்டபடிக்குள்ள பத்திரமல்லாத வேறே) யாதொரு ஆதாரவாகவாவது".

47-வது பிரிவில் திருத்தம்.

15. 47-வது பிரிவில்—

(i) [இந்தத் திருத்தம் தமிழ்மொழிபெயர்ப்பில் அவசியமில்லை];

(ii) "செக்" என்னும் வார்த்தை முதல் தடவையாக வரும்போது அதை விட்டுவிடவேண்டும்;

(iii) "ப்ராமிஸொரி நோட் அல்லது" என்னும் வார்த்தைகளுக்குப் பிறகு "இரண்டு அணு தீர்வை விதிக்கப்படத்தக்க யாதொரு செக்" என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

புதிய 1A ஷெட்யூல்.

16. ஷை ஆக்டின் 1-வது ஷெட்யூலுக்குப் பிறகு அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ளவேண்டும்; அதாவது:—

## 1A ஷெட்யூல்.

### 1922-ம்ஸூ௵த்திய சென்னபட்டணத்து முத்திரைக்கடுதாசி (திருத்துவதற்கான) ஆக்டின்படி சில ஆதாரவுகளுக்கு முத்திரைத் தீர்வை.

(3-வது பிரிவின் முதல் விலக்கு நிபந்தனையைப் பார்க்கவும்.)

| இன்ன ஆதாரவுகள். | சரியான முத்திரைத்தீர்வை. | |
|---|---|---|
| 1. **கடனை ஒப்புக்கொள்வது,** தொகையிலாவது விலையிலாவது இருபது ரூபாய்க்கு மேற்பட்ட கடனைக்குறித்துச் சாட்சியமாக ருஜுகொடுக்கும்பொருட்டு (யாதொரு ஸாவ்காருடைய பாஸ் புஸ்தகம் தவிர வேறே) யாதொரு புஸ்தகத்திலாவது தனித்துண்டு கடுதாசியிலாவது கடன் வாங்கிக்கொண்டவராலாகிலும் அவர் பட்சத்திலாகிலும் எழுதப்பட்டாயினும் கையெழுத்து செய்யப்பட்டாயினும், அந்தப் புஸ்தகம் அல்லது கடுதாசி கடன் கொடுத்தவருடைய ஸ்வாதீனத்தில் விடப்பட்டிருந்தால்: ஆனால், அவ்வாறு ஒப்புக்கொள்வதிலே, கடனைக் கொடுத்துவிடும்படியாக யாதொரு வாக்குத்தத்தமாவது வட்டி கொடுப்பதாக அல்லது யாதொரு சரக்கு அல்லது சொத்தை ஒப்பிப்பதாக யாதொரு நிபந்தனையாவது இருக்கக்கூடாது. | இரண்டு அணு. | |
| 2. **அட்மினிஸ்ட்ரேஷன் பாண்ட்,** 1865-ம்ஸூ௵த்திய இந்துதேசத்து தாயபாக ஆக்ட் 256-வது பிரிவின்படிக்காவது, 1873-ம்ஸூ௵த்துக் கவர்ன்மென்ட் ஸேவிங்ஸ் பாங்க் ஆக்ட் 6-வது பிரிவின்படிக்காவது, 1881-ம்ஸூ௵த்து ப்ரொபேட்டையும் அட்மினிஸ்ட்ரேஷனையுங்குறித்த ஆக்ட் 78-வது பிரிவின்படிக்காவது, 1889-ம்ஸூ௵த்து ஸக்ஸெஷன் ஸெர்டிபிகேட் ஆக்ட் 9 அல்லது 10-வது பிரிவின்படிக்காவது கொடுக்கப்பட்ட பத்திரமுட்பட— | | 1865-ம்ஸூ௵த்து 10-வது ஆக்ட். 1873-ம்ஸூ௵த்து 5-வது ஆக்ட். 1881-ம்ஸூ௵த்து 5-வது ஆக்ட். 1889-ம்ஸூ௵த்து 7-வது ஆக்ட். |
| (a) தொகை 1,000 ரூபாய்க்கு அதிகப்படாத விஷயத்தில் ... ... | அவ்வளவு தொகைக்கு ஏற்பட்ட (நம்பர் 14) பாண்டுக்குண்டான தீர்வை. | |
| (b) வேறே யாதொரு விஷயத்தில் ... ... ... ... | பத்து ரூபாய். | |
| 3. **ஸ்வீகாரபத்திரம்,** அதாவது யாதொரு ஸ்வீகாரத்தை ரெகார்ட் செய்கிற அல்லது ஸ்வீகாரஞ்செய்துகொள்ள அதிகாரம் கொடுக்கிற அல்லது கொடுப்பதாகப் பொருள்படுகிற (உயிலல்லாத வேறே) யாதொரு ஆதரவு. | இருபது ரூபாய். | |
| **அட்வொகேட்.**—அட்வொகேட்டாக தாக்கல் (27-வது நம்பர்) இதைப் பார்க்க. | | |
| 4. **பிரமாணபத்திரிகை,** பிரமாணம் செய்வதற்கு பர்த்தியாக உறுதிமொழி கூறவாவது உறுதிமொழிப்பத்திரிகை எழுதிக்கொடுக்கவாவது சட்டத்தினாலே அதிகாரம் கொடுக்கப்பெற்ற நபர்களின் விஷயத்தில் உறுதிமொழி அல்லது எழுதிக்கொடுத்த உறுதிமொழிப்பத்திரிகை உட்பட. | இரண்டு ரூபாய். | |

1A ஷெட்யூல்—தொடர்ச்சி

| இன்ன ஆதரவுகள். | சரியான முத்திரைத் தீர்வை. |
|---|---|

**விவாரணைகள்.**

பிரமாணபத்திரிகை அல்லது எழுத்துமூலமான உறுதிமொழிப்பத்திரிகை—

1911-ம்௵த்து 8-வது ஆக்ட். (a) 1911-ம்௵த்திய இந்துதேசத்து ராணுவ ஆக்டின்படி ராணுவத்தில் சேருவதாய் உடன்படிக்கையாக;

(b) யாதொரு கோர்ட்டிலாவது யாதொரு கோர்ட் உத்தியோகஸ்தருக்கு முன்பாகவாவது உடனே தாக்கல் செய்வதற்காக அல்லது உபயோகிப்பதற்காக; அல்லது,

(c) யாதொரு பென்ஷனையாவது தருமவர்த்தனையையாவது எவரையாகிலும் பெற்றுக்கொள்ளும்படிக்கு செய்வதற்காக மாத்திரமே,

எழுதப்பட்டால்.

**5. உடன்படிக்கை அல்லது உடன்படிக்கை யாதாஸ்து—**

(a) யாதொரு பில் ஆவ எக்ஸ்சேஞ்ஜின் விற்பனையைக் குறித்ததானால் ... — மூன்று அணா.

(b) யாதொரு கவர்னமென்ட் பத்திரத்தின் அல்லது யாதொரு சட்டப்படி ஏற்பட்ட கம்பெனியில் அல்லது இதரமான ஒன்றுசேர்ந்த கூட்டத்திலுள்ள பங்கின் விற்பனையைக் குறித்ததானால்; — பதினைந்து ரூபாய்க்கு மேற்படக்கூடாதென்பதற்குட்பட்டு, அந்தப் பத்திரம் அல்லது பங்கின் விலைமதிப்பில் பிரதி 10,000 ரூபாய் அல்லது அதன் பாகத்துக்கு ஒன்றரை அணா.

(c) மற்றப்படி சொல்லியிராததானால் ... ... ... .. — ஒன்னிரண்டு அணா.

**விவாரணைகள்.**

உடன்படிக்கை அல்லது உடன்படிக்கை யாதாஸ்து—

(a) வஸ்துக்கள் அல்லது சரக்குகளின் விற்பனைக்கேயாவது விற்பனை சம்பந்தமாகவேயாவது ஏற்பட்டதாயிருந்த 38-வது நம்பரின்படி தீர்வை விதிக்கப்படத்தக்க குறிப்பு அல்லது யாதாஸ்து அல்லாதது;

(b) யாதொரு கடனுக்காகவாவது கடன்சம்பந்தமாகவாவது இந்தியா கவர்ன்மென்டுக்கு (டெண்டர்) தாககாஸ்து ரூபமாய்ச் செய்யப்பட்டது;

1874-ம்௵த்து 9-வது ஆக்ட். (c) 1874-ம்௵த்து யுரோபபியர்களாகிய ஊர்ச்சுற்றிகள் ஆக்ட் 17-வது பிரிவின்படி செய்யப்பட்டது.

**குத்தகை அல்லது வாடகைக்குவிட உடன்படிக்கை.**—(32-ம் நம்பர்) குத்தகை அல்லது வாடகைச் சீட்டைப் பார்க்க.

**6. ஆட்சிப்பத்திரங்களைக் கட்டுவதற்காவது அடகு அல்லது அடமானத்துக்காவது சம்பர்தப்பட்டிருக்கிற உடன்படிக்கை,** எனவே,—

(1) ஆட்சிப்பத்திரங்களையோ (விற்பனை செய்யக்கூடிய பத்திரமல்லாத வேறே) எவ்வித சொத்துக்கும் பாத்தியதை உண்டுபண்ணுகிற அல்லது அந்த பாத்தியதைக்கு சாக்ஷியமாயிருக்கிற ஆதாவுகளையோ கட்டுவதற்காவது,

(2) அசையும் பொருளை அடகு அல்லது அடமானம் வைப்பதற்காவது,

கடனாகக் கொடுக்கப்பட்டாகிலும் கொடுக்கப்போகிறதாகவாகிலுமுள்ள பணத்தையோ இப்போதிருக்கிற அல்லது இனிமேல் உண்டாகப்போகிற பாக்கியையோ திருப்பிச் செலுத்துவதன்பொருட்டு ஈடாக அப்படி கட்டியாவது, அடகு அல்லது அடமானம் வைத்தாவது இருக்கிறபட்சத்திலே,

சம்பந்தப்பட்ட உடன்படிக்கைக்கு சாக்ஷியமாயிருக்கிற யாதொரு ஆதாவு—

(a) கேட்கும்போதாவது, உடன்படிக்கைக்கு சாக்ஷியமாயிருக்கிற ஆதரவின் தேதிமுதல் மூன்று மாதத்திற்கு மேற்பட்டாவது ஷை கடன் அல்லது பாக்கி தீர்த்துவிடத்தக்கதாயிருந்தால;—

| | ஒற்றையாக எழுதினால். | | | ஒருஜதைக்கு இரண்டெழுதினால் அவகளில் ஒவ்வொன்றுக்கும். | | | ஒருஜதைக்கு மூன்றெழுதினால் அவைகளில் ஒவ்வொன்றுக்கும். | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூ. | அ. | ப. | ரூ. | அ. | ப. | ரூ. | அ. | ப. |
| (i) அந்தக் கடன் அல்லது பாக்கித்தொகை 200 ரூபாய்க்கு மேற்படாவிட்டால் | 0 | 4 | 6 | 0 | 3 | 0 | 0 | 1 | 6 |
| (ii) ரூபாய் 200 க்கு மேற்பட்டு ரூபாய் 400 வரையில் .. .. | 0 | 9 | 0 | 0 | 4 | 6 | 0 | 3 | 0 |
| ,, 400 ,, 600 ,, .. .. | 0 | 13 | 6 | 0 | 7 | 6 | 0 | 4 | 6 |
| ,, 600 ,, 800 ,, .. .. | 1 | 2 | 0 | 0 | 9 | 0 | 0 | 6 | 0 |
| ,, 800 ,, 1,000 ,, .. .. | 1 | 6 | 6 | 0 | 12 | 0 | 0 | 7 | 6 |
| ,, 1,000 ,, 1,200 ,, .. .. | 1 | 11 | 0 | 0 | 13 | 6 | 0 | 9 | 0 |
| ,, 1,200 ,, 1,600 ,, .. .. | 2 | 4 | 0 | 1 | 2 | 0 | 0 | 12 | 0 |
| ,, 1,600 ,, 2,500 ,, .. .. | 3 | 6 | 0 | 1 | 11 | 0 | 1 | 2 | 0 |
| ,, 2,500 ,, 5,000 ,, .. | 6 | 12 | 0 | 3 | 6 | 0 | 2 | 4 | 0 |
| ,, 5,000 ,, 7,500 ,, .. .. | 10 | 0 | 0 | 5 | 1 | 0 | 3 | 6 | 0 |
| ,, 7,500 ,, 10,000 ,, .. .. | 13 | 8 | 0 | 6 | 12 | 0 | 4 | 8 | 0 |
| ,, 10,000 ,, 15,000 ,, .. .. | 20 | 4 | 0 | 10 | 2 | 0 | 6 | 12 | 0 |
| ,, 15,000 ,, 20,000 ,, .. .. | 27 | 0 | 0 | 13 | 8 | 0 | 9 | 0 | 0 |
| ,, 20,000 ,, 25,000 ,, .. .. | 33 | 12 | 0 | 16 | 14 | 0 | 11 | 4 | 0 |
| ,, 25,000 ,, 30,000 ,, .. .. | 40 | 8 | 0 | 20 | 4 | 0 | 13 | 3 | 0 |
| ,, 30,000 க்கு மேற்பட்டு அதிகப்படியான பிரதி 10,000 ரூபாய்க்காவது அதன் பாகத்துக்காவது; | 13 | 8 | 0 | 6 | 12 | 0 | 4 | 8 | 0 |

**1A ஷெட்யூல்—தொடர்ச்சி.**

| இன்ன ஆதரவுகள். | சரியான முத்திரைத் தீர்வை. | |
|---|---|---|
| (b) ஷை ஆதரவின் தேதிமுதல் ஷை கடன் அல்லது பாக்கி மூன்று மாதத்திற்கு மேற்படாமல் தீர்த்துவிடத்தக்கதாயிருந்தால். | கிடைத்த தொகைக்கு (a) குறிப்பிட்ட பகுதியைச்சேர்ந்த (i) அடையாளமிட்ட உட்பகுதியின்படிக்காவது (a) குறிப்பிட்ட பகுதியைச் சேர்ந்த (ii) அடையாளமிட்ட உட்பகுதியின்படிக்காவது யாதொரு கடன அல்லது பாக்கிக்குச் செலுத்ததக்க தீர்வையில் பாதி. | |
| **நிவாரணை.** | | |
| சாக்ஷிபோடாவிட்டால் சாமான்களின் அடகு அல்லது அடமானத்தைக்குறித்த ஆதரவு. | | |
| 7. **அதிகாரத்தை நிறைவேற்றுவதில் நேமக பத்திரிகை,** ட்ரஸ்டிகள் சம்பந்தமாயாவது அசையும் பொருள் அல்லது அசையாப் பொருள் சம்பந்தமாயாவது உயிலல்லாத வேறே யாதொரு எழுத்துமூலமாய்ச் செய்யப்படுமாகில். | இருபத்தைந்து ரூபாய். | |
| 8 **விலைமதிப்பு அல்லது விலை நிர்ணயம்,** விபாஜ்ஜியம் நடந்துகொண்டிருக்கையில் கோர்ட் உத்தரவின்படிக்கல்லாமல் வேறே விதமாய்ச் செய்யப்பட்டது— | | |
| (a) தொகை 1,000 ரூபாய்க்கு அதிகப்படாத விஷயத்தில் .. .. | அவ்வளவு தொகைக்கு ஏற்பட்ட (நம்பர் 15) பாட்டம்ரி பாண்டுக்குண்டான தீர்வை. | |
| (b) இதரமான யாதொரு விஷயத்தில் .. .. .. .. | ஏழு ரூபாய் எட்டணா. | |
| **நிவாரணைகள்.** | | |
| (a) உடன்படிக்கையினாலாவது சட்ட வியாடகத்தினாலாவது வவ்வதத்தினாலாவது இரு திறத்தாரும் கடமைப்பட்டிருப்பதல்லாததாய், ஒரு திறத்தாருக்கு மாத்திரம் தெரிவிப்பதற்காகச் செய்யப்பட்ட விலைமதிப்பு அல்லது விலை நிர்ணயம். | | |
| (b) குத்தகைத் தொகையாகப் பூமிக்குடையவருக்குக் கொடுக்கவேண்டிய தொகையை நிச்சயிக்கும்பொருட்டு மாசூலின் தொகை மதிப்பு. | | |
| 9. **வேலை கற்றுக்கொள்ளுவதற்கான சாஸனம,** (11-வது நம்பர்) க்ளார்க் உத்தியோக நிபந்தனைகள் அல்லாமல், யாதொரு தொழில் - வர்த்தகம் அல்லது அலுவலைக் கற்றுக்கொள்ள எஜமானனிடத்தில் விடப்பட்ட அப்பியாசி - க்ளார்க அல்லது வேலைக்காரனுடைய ஊழியத்திற்காவது கற்பனைக்காவது சம்பந்தமான எல்லா **ஆதரவுகளும்** உள்பட. | ஏழு ரூபாய் எட்டு அணா. | |
| **நிவாரணை.** | | |
| 1850-ம் வருஷத்து வேலை கற்றுக்கொள்ளுகிறவர் ஆக்டின்படி மாஜிஸ்ட்ரேட்டினால் எழுதிக்கொடுக்கப்படுகிற அல்லது யாதொரு பொதுவான தருமசாலையாலாவது அந்த தருமசாலையின் செலவினாலாவது ஒருவன் வேலை கற்றுக்கொள்ள அமர்த்திக்கொள்ளப்படுகிற வேலை கற்றுக்கொள்ளுவதற்கான ஆதரவுகள். கள். | | 1850-ம் வருஷத்து 19-வது ஆக்ட். |
| 10. **ஒரு கம்பெனியாருடைய கூட்டத்தின் நியமங்கள்.** | ஐம்பது ரூபாய். | |
| **நிவாரணை.** | | |
| இலாபத்துக்காக ஏற்படுத்தப்படாமலும் 1913-ம் வருஷத்திய இந்துதேசத்து கம்பெனிகளைக் குறித்து ஆக்ட் 26-வது பிரிவின்படி ரெஜிஸ்டர் செய்யப்பட்டும் இருக்கிற யாதொரு கூட்டத்தின் நியமங்கள். | | 1913-ம் வருஷத்து 7-வது ஆக்ட். |
| (34-வது நம்பர்) யாதொரு கம்பெனியின் கூட்டத்து யாதாஸ்தையும் **பார்க்க.** | | |
| 11. **க்ளார்க் உத்தியோக நிபந்தனைகள்,** அல்லது எவராவது யாதொரு ஹைகோர்ட்டிலே தாம் அட்டார்னியாய் ஏற்றுக்கொள்ளப்படும்பொருட்டு க்ளார்க்காக சேவிக்க முதலில் உடன்பட்டு எழுதிக்கொடுக்கிற உடன்படிக்கை. | முந்நூற்றெழுபத்தைந்து ரூபாய். | |
| **சாட்டுதல் பத்திரம்.**—(21 வது நம்பர்) ஒப்படைப் பத்திரத்தையும், (54-வது நம்பர்) ட்ரான்ஸ்பர் பத்திரத்தையும், (55-வது நம்பர்) குத்தகை அல்லது வாடகை ட்ரான்ஸ்பர் பத்திரத்தையும் சந்தர்ப்பத்துக்கேற்றபடி **பார்க்க.** | | |
| **அட்டர்னி.**—(27-வது நம்பர்) அட்டர்னியாகத் தாக்கலையும், (42-வது நம்பர்) பவர் ஆவ் அட்டர்னியையும் **பார்க்க.** | | |
| **ஸ்வீகாரஞ்செய்துகொள்ள அதிகாரம்.**—(3-வது நம்பர்) ஸ்வீகார பத்திரத்தைப் **பார்க்க.** | | |
| 12. **பஞ்சாயத்து தீர்மானம்,** அதாவது, வியாஜ்ஜியம் நடந்துகொண்டிருக்கையில் கோர்ட்டாருடைய உத்தரவினாலல்லாமல் மற்றப்படி ஆலோசனைக்கு அனுப்பப்படுவதன்மேல் யாதொரு பஞ்சாயத்துதாரராவது மத்தியஸ்தராவது பாகம் பிரித்துக்கொள்ளும்படி உத்தரவுசெய்யும் தீர்மானமல்லாத எழுத்துமூலமாய்ச் செய்கிற வேறே யாதொரு தீர்மானம்— | | |
| (a) அந்தத் தீர்மானம் சம்பந்தப்படுகிற தொகை அல்லது சொத்தின் கிரயம் அந்தத் தீர்மானத்தில் கண்டிருக்கிறபடி 1,000 ரூபாய்க்கு மேற்படாவிட்டால். | அவ்வளவு தொகைக்கு ஏற்பட்ட (நம்பர் 15) பாட்டம்ரி பாண்டுக்குண்டான தீர்வை. | |
| (b) அந்தத் தொகை 1,000 ரூபாய்க்கு மேற்பட்டும் 5,000 ரூபாய்க்கு மேற்படாமலும் இருந்தால. | ஏழு ரூபாய் எட்டு அணா. | |

1-A ஷெட்யூல்—தொடர்ச்சி

| இன்ன ஆதரவுகள். | சரியான முத்திரைத்தீர்வை. |
|---|---|
| 5,000 ரூபாய்க்கு மேற்பட்டு அதிகப்படியான ஒவ்வொரு 1,000 ரூபாய்க்காவது அதன் பாகத்துக்காவது. | மொத்தத்தில் ஐம்பது ரூபாய்க்கு மேறபடக்கூடாதென்பதற்குட்பட்டு எட்டு அணா. |

**நிவாரணை.**

1901-ம் ௵த்து பம்பாய் 3-வது ஆக்ட். 1874-ம் ௵த்து பம்பாய் 3-வது ஆக்ட்.

1901-ம் ௵த்து பம்பாய் டிஸ்ட்ரிக்ட் மியுனிஸிபல் ஆக்ட் 160-வது பிரிவின்படியாகிலும் 1874-ம் ௵த்து பம்பாய் பரம்பரை உத்தியோகங்களைக்குறித்த ஆக்ட் 18-வது பிரிவின்படியாகிலும் பஞ்சாயத்து தீர்மானம்.

**13. பில் ஆவ் லேடிங் என்னும் வார்நாமா,** (யாதொரு த்ரூ பில் ஆவ் லேடிங் உள்பட). — ஆறு அணா.

**குறிப்பு.**—பாகங்களாக பில் ஆவ் லேடிங் எழுதப்பட்டால், அதற்குண்டாகிய சரியான முத்திரையை அர்த ஜதையில் ஒவ்வொன்றுக்கும் போடவேண்டும்.

**நிவாரணைகள்.**

1908-ம் ௵த்து 15-வது ஆக்ட்.

(a) பில் ஆவ் லேடிங் என்னும் வார்நாமா—அதில் கண்டிருக்கிற சரக்குகள் 1908-ம் ௵த்திய இந்து தேத்து ரேவு ஆக்டில் விவரித்திருக்கிற யாதொரு ரேவின் எல்லைகளுக்குள் ஓரிடத்திலே வரப்பற்றிக்கொள்ளப்பட்டு, அதே ரேவின் எல்லைகளுக்குள் வேறோரிடத்திலே ஒப்பிக்கப்படவேண்டியதாயிருந்தால்.

(b) பில் ஆவ் லேடிங்—ப்ரிடிஷ் இந்தியாவுக்கு வெளியிலே எழுதப்பட்டதாகவும் ப்ரிடிஷ் இந்தியாவில் ஒப்பிக்கப்படவேண்டிய சொத்தைக் குறித்ததாகவும் இருந்தால்.

1870-ம் ௵த்து 7-வது ஆக்ட்.

**14. பாண்ட் (பத்திரம்)** [2(5) வது பிரிவினல் விவரிக்கப்பட்ட பிரகாரம்] (25-வது நம்பர்) டிபென்சராயிராததும், இந்த ஆக்டிலாவது 1870-ம் ௵த்துக் கோர்ட் கட்டண ஆக்டிலாவது வேறேவிதமாய்ச் சொல்லியிராததும்—

| இன்ன ஆதரவுகள். | | | சரியான முத்திரைத்தீர்வை. |
|---|---|---|---|
| அடையப்பட்ட தொகை அல்லது கிரயம் ரூபாய் 10 க்கு மேற்படாத விஷயத்தில். | | | இரண்டு அணா. |
| அது ரூபாய் 10 க்கு மேற்பட்டு | ரூபாய் 50 வரையிலே. | | நாலணா. |
| 50 | ,, | 100 ,, | எட்டு அணா. |
| 100 | ,, | 200 ,, | ஒரு ரூபாய் நாலணா. |
| 200 | ,, | 300 ,, | ஒரு ரூபாய் பதினாலணா. |
| 300 | ,, | 400 ,, | இரண்டு ரூபாய் எட்டு அணா. |
| 400 | ,, | 500 ,, | மூன்று ரூபாய் இரண்டு அணா. |
| 500 | ,, | 600 ,, | நான்கு ரூபாய் எட்டு அணா. |
| 600 | ,, | 700 ,, | ஐந்து ரூபாய் நாலணா. |
| 700 | ,, | 800 ,, | ஆறு ரூபாய். |
| 800 | ,, | 900 ,, | ஆறு ரூபாய் பன்னிரண்டு அணா. |
| 900 | ,, | 1,000 ,, | ஏழு ரூபாய் எட்டு அணா. |
| ரூபாய 1,000 க்கு மேற்பட்டுப் பிரதி 500 ரூபாய்க்காவது அதன் பாகத்துக்காவது. | | | மூன்று ரூபாய் பன்னிரண்டு அணா. |

(2-வது நம்பர்) அட்மினிஸ்ட்ரேஷன் பாண்டையும், (15-வது நம்பர்) பாட்டம்ரி பாண்டையும், (24-வது நம்பர்) கஸ்டம்ஸ் பாண்டையும், (31-வது நம்பர்) இண்டெம்னிடி பாண்டையும், (49-வது நம்பர்) கப்பற்சரக்கு அடமான பத்திரத்தையும், (50-வது நம்பர்) பொறுப்புப்பத்திரத்தையும் பார்க்க.

**நிவாரணைகள்.**

பாண்ட்—

1876-ம் ௵த்து வங்காளம் 3-வது ஆக்ட்.

(a) 1876-ம் ௵த்திய வங்காளத்து இரிகேஷன் ஆக்டின்படி அலுவல்களைக் கிரம்மாய் நிறைவேற்றுவதற்காக அந்த ஆக்ட் 99-வது பிரிவை அனுசரித்துச் செய்யப்பட்ட விதிகளின்படி நியமிக்கப்பட்ட தலைவர்களால் எழுதிக்கொடுக்கப்பட்டால்;

(b) தரும டிஸ்பென்ஸரி அல்லது ஆஸ்பத்திரிக்காவது அசேஷ ஜன உபயோகத்திற்கான வேறே யாதொரு விஷயத்திற்காவது ஜனங்கள் செய்திருக்கும் கையொப்பத்தினுல் கிடைக்கும் பிரதேச வரும்படி மாதமொன்றுக்குக் குறித்த தொகைக்கு குறையாதென்று உத்தரவாதம் செய்யும்பொருட்டு யாதொரு நபரால் எழுதிக்கொடுக்கப்பட்டால்.

**15. பாட்டம்ரி பாண்ட்** என்னும் கப்பல் ஈட்டுப்பத்திரம், அதாவது—கடலில் சபர்போகிற கப்பலின் மாஸ்டரானவர் தாம் கப்பலைக் காப்பாற்றிக்கொள்வதாவது சபரை முடிப்பதாவது கூடுமானதாயிருக்கும்படி அந்தக் கப்பலை ஈடுகொட்டிப் பணம் கடன் வாங்கிக்கொண்டு எழுதிக்கொடுக்கிற யாதொரு ஆதரவு—

| இன்ன ஆதரவுகள். | சரியான முத்திரைத்தீர்வை. |
|---|---|
| அடையப்பட்ட தொகை அல்லது கிரயம் ரூபாய் 10 க்கு மேற்படாத விஷயத்தில். | மூன்று அணா. |

1A ஷெட்யூல்—தொடர்ச்சி.

| இன்ன ஆதரவுகள். | சரியான முத்திரைத் தீர்வை. |
|---|---|
| அடையப்பட்ட தொகை அல்லது கிரயம் ரூபாய் 10 க்கு மேற்பட்டு ரூபாய் 50 வரையிலே. | ஆறு அணா. |
| ,, 50 ,, 100 ,, | பன்னிரண்டு அணா. |
| ,, 100 ,, 200 ,, | ஒரு ரூபாய் எட்டு அணா. |
| ,, 200 ,, 300 ,, | இரண்டு ரூபாய் நாலணா. |
| ,, 300 ,, 400 ,, | மூன்று ரூபாய். |
| ,, 400 ,, 500 ,, | மூன்று ரூபாய் பன்னிரண்டு அணா. |
| ,, 500 ,, 600 ,, | நாலு ரூபாய் எட்டு அணா. |
| ,, 600 ,, 700 ,, | ஐந்து ரூபாய் நாலணா. |
| ,, 700 ,, 800 ,, | ஆறு ரூபாய். |
| ,, 800 ,, 900 ,, | ஆறு ரூபாய் பன்னிரண்டு அணா. |
| ,, 900 ,, 1,000 ,, | ஏழு ரூபாய் எட்டு அணா. |
| ரூபாய் 1,000க்கு மேற்பட்டு பிரதி 500 ரூபாய்க்காவது அதன் பாகத்துக்காவது. | மூன்று ரூபாய் பன்னிரண்டு அணா. |
| **16. கான்ஸெல்லேஷன் என்னும் ரத்து ஆதரவு (பத்திரம்)**—(முன்னே எழுதிக் கொடுக்கப்பட்ட யாதொரு ஆதரவு எதனால் ரத்து செய்யப்படுகிறதோ அப்படிப்பட்ட ஆதரவு அடங்கினது) இது சாக்ஷி கையெழுத்து போடப்பட்டு வேறுவிதமாக ஏற்பாடு செய்யப்படாமலிருந்தால். (48 வது நம்பர்) விடுதலைப்பத்திரத்தையும், (51 - B நம்பர்) பொருத்த ஆதரவு ரத்தையும், (53-வது நம்பர்) குத்தகை அல்லது வாடகை விடுதலைச் சீட்டையும், (56 - B நம்பர்) ட்ரஸ்ட் ரத்தையும் பார்க்க. | பத்து ரூபாய். |
| **17. விற்பனை ஸேர்டிபிகேட்**—(தனித்தனி லாட்டாக வைத்து விற்கப்பட்ட ஒவ்வொரு சொத்தின் விஷயமாய்) ஸிவில் அல்லது ரெவினியு கோர்ட்டாராலாவது கலெக்டர் அல்லது வேறே ரெவினியு உத்தியோகஸ்தராலாவது பஹிரங்கமான ஏலத்தில விற்கப்பட்ட யாதொரு சொத்தைக் கிரயத்துக்குக் கொண்டவருக்குக் கொடுக்கப்பட்டது— | |
| (a) கிரயத்தொகை 10 ரூபாய்க்கு அதிகப்படாவிட்டால் ... .. .. | மூன்று அணா. |
| (b) கிரயத்தொகை 10 ரூபாய்க்கு அதிகப்பட்டு 25 ரூபாய்க்கதிகப்படாவிட்டால். | ஆறு அணா. |
| (c) இதரமான யாதொரு விஷயத்தில். .. .. .. .. | கிரயத் தொகைக்கு மாத்திரம் சரியான ஐவேஜுக்காக ஏற்பட்ட (21-வது நம்பர்) ஒப்படைப் பத்திரத்துக்குண்டான தீர்வை. |
| **18. சார்ட்டர் பார்ட்டி என்னும் கப்பற்கேள்வு உடன்படிக்கை; அதாவது**—(கப்பல்களை இழுப்பதற்கான ஸ்டீமரைக் கூலிக்கு அமர்த்திக்கொள்ளுகிற உடன்படிக்கை தவிர) சபர்போகக் கூலிக்கு அமர்த்திக்கொள்ளுகிறவருடைய இன்ன காரியங்களுக்கென்று யாதொரு கப்பல் அல்லது அதனுடைய குறித்த பிரதான பாகத்தைக் கூலிக்கு விட்டு எழுதிக்கொடுக்கிற ஆதரவு; இதில் அபராத பகுதி அடங்கியிருந்தாலுஞ்சரி இராவிட்டாலுஞ்சரி. | இரண்டு ரூபாய் |
| **19. செக்** [2 (7) பிரிவினால் விவரிக்கப்பட்ட பிரகாரம்] .. .. .. | இரண்டு அணா. |
| **20. காம்போஸிஷன் சாஸனம் அல்லது ஒருமை உடன்படிக்கை, அதாவது**-கடன் வாங்கினவர் தமக்கு கடன் கொடுத்தவர்களுடைய பிரயோசனத்துக்குத் தம்முடைய சொத்து சேரும்படிக்காவது, அவர்களுடைய கடனுக்கு இவ்வளவு தொகையாகிலும் பங்கு வீதமாகிலும் கடன்கொடுத்தவர்களுக்குச் செலுத்துவதாகவாவது, கடன் வாங்கினவருடைய தொழிலைக் கண்காணிகளுடைய மேற்பார்வைக்குளாகிலும் கடனைச்செலுத்த பத்திரிகைமூலமாய் வாயிதாபெற்றுக்கொண்டாகிலும், அவருக்குக் கடன்கொடுத்தவர்களுடைய பிரயோசனத்துக்காக நடத்துவதாய் ஷரத்து கண்டாவது, கடன்காரர் எழுதிக்கொடுக்கிற யாதொரு ஆதரவு. | பதினைந்து ரூபாய். |
| **21. ஒப்படைப்பத்திரம்**—[2 (10) பிரிவினால் விவரிக்கப்பட்ட பிரகாரம்] 54-வது நம்பரின்படி கட்டணம் வாங்கப்பட்ட அல்லது திவாரணை செய்யப்பட்ட ட்ரான்ஸ்பராயிராதது— | |
| அப்படிப்பட்ட ஒப்படைப்பத்திரத்துக்காக அதில் கண்டிருக்கிறபடி ஐவேஜுத் தொகை அல்லது விலை 50 ரூபாய்க்கு மேற்படாவிட்டால. | பன்னிரண்டு அணா. |
| அது ரூபாய் 50 க்கு மேற்பட்டு ரூபாய் 100 வரையில் .. .. .. .. | ஒரு ரூபாய் எட்டு அணா. |
| ,, 100 ,, 200 ,, .. .. .. .. | மூன்று ரூபாய். |
| ,, 200 ,, 300 ,, .. .. .. .. | நான்கு ரூபாய் எட்டு அணா. |
| ,, 300 ,, 400 ,, .. .. .. .. | ஆறு ரூபாய். |
| ,, 400 ,, 500 ,, .. .. .. .. | ஏழு ரூபாய் எட்டு அணா. |
| ,, 500 ,, 600 ,, .. .. .. .. | ஒன்பது ரூபாய். |
| ,, 600 ,, 700 ,, .. .. .. .. | பத்து ரூபாய் எட்டு அணா. |
| ,, 700 ,, 800 ,, .. .. .. .. | பன்னிரண்டு ரூபாய். |
| ,, 800 ,, 900 ,, .. .. .. .. | பதின்மூன்று ரூபாய் எட்டு அணா. |
| ,, 900 ,, 1,000 ,, .. .. .. .. | பதினைந்து ரூபாய். |
| ரூபாய் 1,000 க்கு மேற்பட்டுப் பிரதி 500 ரூபாய்க்காவது அதன் பாகத்துக்காவது. | ஏழு ரூபாய் எட்டு அணா. |

1A ஷெட்யூல்—தொடர்ச்சி.

| இன்ன ஆதரவுகள். | சரியான முத்திரைத் தீர்வை. |
|---|---|
| நிவாரணை. | |
| 1914-ம்௵த்து 3-வது ஆக்ட் — 1914-ம்௵த்திய இந்து தேசத்து காபிரைட் ஆக்ட் 5-வது பிரிவின்படி காபிரைட் என்னும் சுதந்தரத்தைச் சாட்டுதல். | |
| **கூட்டுப்பங்கு பத்திரம்**—(41-வது நம்பர்) கூட்டுப்பங்கைப் பார்க்க. | |
| 22. **நகல் அல்லது எக்ஸ்ட்ராக்ட்**—யாதொரு ஸர்க்கார் உத்தியோகஸ்தராலாவது அவருடைய உத்தரவின்படிக்காவது சரியான நகல் அல்லது எக்ஸ்ட்ராக்டென்று ஸெர்டிபை செய்யப்பட்டு, கோர்ட் கட்டணங்களைக்குறித்து அந்தந்த காலத்தில் வழங்கிவருகிற சட்டப்படி கட்டணத்திற்குட்படாதிருப்பது— | |
| (i) அசலுக்குத் தீர்வையில்லாதிருந்தாலும் அதற்குண்டான தீர்வை ஒரு ரூபாய்க்கு மேற்படாவிட்டாலும். | பன்னிரண்டு அணா. |
| (ii) வேறே யாதொரு விஷயத்தில் .. .. .. .. .. | ஒரு ரூபாய் எட்டு அணா. |
| நிவாரணைகள். | |
| (a) யாதொரு தஸ்தவேஜுக்கு ஸர்க்கார் உத்தியோகஸ்தர் யாதொரு ஸர்க்கார் ஆபிஸில் ரெகார்டுக்காவது யாதொரு பொதுக் காரியத்திற்காவது சட்டப்படி வெளிப்படையாய் எழுதவாகிலும் கொடுக்கவாகிலும் வேண்டியிருக்கிற நகல். | |
| (b) ஜனனம், ஞானஸ்நானம், நாமகரணம், அர்ப்பணம், விவாகம், விவாக சம்பந்த நிவர்த்தி, மரணம் அல்லது பிரேத அடக்கத்துக்குச்சம்பந்தப்பட்ட யாதொரு ரெஜிஸ்டருக்கு நகல் அல்லது அந்த ரெஜிஸ்டரிலிருந்து எடுக்கப்பட்ட எக்ஸ்ட்ராக்ட். | |
| 23. **எதிரிடை அல்லது இரண்டாம் பிரதி**—தீர்வைக்குட்பட்டதாயிருந்து சரியான தீர்வை செலுத்தப்பட்டிருக்கிற யாதொரு ஆதரவுக்கு எதிரிடை அல்லது இரண்டாம் பிரதி— | |
| (a) அசலாதரவுக்கு விதிக்கத்தக்க தீர்வை ஒரு ரூபாய் எட்டு அணாவுக்கு மேற்படாவிட்டால் ; | அசலுக்குச் செலுத்தத்தக்க தீர்வை. |
| (b) வேறே யாதொரு விஷயத்தில் .. .. .. .. .. | ஒரு ரூபாய் எட்டு அணா. |
| நிவாரணை. | |
| பயிரிடுவோனுக்குக் கொடுக்கப்பட்ட யாதொரு குத்தகைச் சீட்டானது தீர்வையினின்றும் நிவாரணை செய்யப்பட்டிருந்தால் அச்சீட்டுக்கு எதிரிடை. | |
| 24. **கஸ்டம்ஸ் பாண்ட்**— | |
| (a) தொகை 1,000 ரூபாய்க்கு மேற்படாவிட்டால் .. .. .. | அவ்வளவு தொகைக்கு ஏற்பட்ட (15-ம் நம்பர்) பாட்டம்ரி பாண்டுக்குண்டான தீர்வை. |
| (b) வேறே யாதொரு விஷயத்தில் .. .. .. .. .. | பத்து ரூபாய். |
| 25. **டிபென்சர்**—(கொதுவை டிபென்சராக இருந்தாலுஞ்சரி இராவிட்டாலுஞ்சரி),— | |
| (a) எண்டார்ஸ்மென்டாலாயினும் பிரத்தியேகமான ட்ரான்ஸ்பர் ஆதரவாலாயினும் ட்ரான்ஸ்பர் செய்யத்தக்கதாய் விற்கத்தக்க பத்திரமாயிருப்பது ; | அதே தொகைக்கு ஏற்பட்ட (15-ம் நம்பர்) பாட்டம்ரி பாண்டுக்குண்டான தீர்வை. |
| (b) ஒப்படையால் ட்ரான்ஸ்பர் செய்யத்தக்கதாய் விற்கத்தக்க பத்திரமாயிருப்பது. | டிபென்சரின் பெயர் மதிப்புக்குச் சமமான ஐவேஜுத் தொகைககு ஏற்பட்ட (21-ம நம்பர்) ஒப்படைப் பத்திரத்துக்குண்டான தீர்வை. |
| **விவரணம்.**—“டிபென்சர்” என்கிற வார்த்தையிலே அதனோடு தொடுக்கப்பட்டிருக்கிற எவ்வித வட்டி கூபன்களும் அடங்கும் ; ஆனால், தீர்வையை மதிப்பிடும்போது அந்த கூபன்களின் தொகையைச் சேர்க்கக்கூடாது. | |
| நிவாரணை. | |
| சட்டப்படி ஏற்பட்ட யாதொரு கம்பெனியாராவது ஒன்றாய்ச்சேர்ந்த வேறே கூட்டத்தாராவது கடன் வாங்கும்போது டிபென்சர் வைத்திருக்கிறவர்களுடைய அனுகூலத்தின்பொருட்டு ட்ரஸ்டிகளிடத்தில் தங்கள் சொத்தை முழுமையுமாகிலும் சிறிதுமட்டிலாகிலும் ஈடுகட்டி, எந்த பத்திரத்தின் ஆதாரத்தால் டிபென்சர்கள் பிறப்பிக்கப்படுகின்றனவோ அந்த டிபென்சர்களின் பூர்ணமான தொகையின் நிமித்தம் கிரமமாய் முத்திரையிடப்பட்டு, ரெஜிஸ்டரான கொதுவைப்பத்திரத்தின் நிபந்தனைகளை அனுசரித்து அந்தக் கம்பெனியாராலாவது கூட்டத்தாராலாவது பிறப்பிக்கப்பட்ட டிபென்சர் ; ஆனால், அப்படி பிறப்பிக்கப்பட்ட டிபென்சர்கள் மேலேசொன்ன கொதுவைப்பத்திரத்தின் நிபந்தனைகளை அனுசரித்துப் பிறப்பிக்கப்பட்டவைகளாகக் கண்டிருக்கவேண்டும். | |
| (14-ம் நம்பர்) பாண்டையும், 8-வது, 55-வது பிரிவுகளையும் பார்க்க. யாதொரு **ட்ரஸ்ட் உறுதிமொழிப் பத்திரிகை**.—(56-ம் நம்பர்) ட்ரஸ்டைப் பார்க்க. | |
| **ஹக்கு சாஸனங்களைக் கட்டிவைப்பது.**—ஆட்சிப்பத்திரங்களைக் கட்டுவதற்காவது அடகு அல்லது அடமானத்துக்காவது சம்பந்தப்பட்டிருக்கிற உடன்படிக்கைப் பத்திரிகையைப் பார்க்க. (6-வது நம்பர்.) | |
| **கூட்டுப்பங்குப் பிரிவினை**—(41-வது நம்பர்) கூட்டுப்பங்கைப் பார்க்க. | |

1A ஷெட்யூல்—தொடர்ச்சி.

| இன்ன ஆதரவுகள். | சரியான முத்திரைத்தீர்வை. |
| --- | --- |
| 26. **விவாகப்பிரிவினை ஆதரவு.**—அதாவது எவராகிலும் தம் விவாகப் பிரிவினையை உண்டுபண்ணுகிற யாதொரு ஆதாவு. | இரண்டு ரூபாய். |
| சீதன ஆதாவு—(51 - வது நம்பா) பொருத்தம் எனபதைப் பார்க்க. | |
| இரண்டாம் பிரதி—(23 - வது நம்பர்) எதிரிடையைப் பார்க்க. | |
| 27. **யாதொரு ஹைகோர்ட் ரோலிலே அட்வோகேட், வக்கில் அல்லது அட்டர்னியாகத் தாக்கல்**—லெடடர்ஸ் பேடென்ட் என்னும் பத்திரததினுலாவது 1884-ம் வருஷத்து நியாயவாதிகளாக்டினுலாவது அந்த கோர்ட்டுக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரத்தைச் செலுத்துகையிலே,—<br>1884-ம் வருஷத்து 9-வது ஆக்ட். | |
| (a) அட்வோகேட் அல்லது வக்கில் விஷயத்தில் ... ... ... | எழுநூற்றைம்பது ரூபாய். |
| (b) அட்டர்னி விஷயத்தில் ... ... ... ... ... | ஐந்நூறு ரூபாய். |
| நிவாரணை.<br>யாதொரு ஹைகோர்ட்டில் முன்னதாகவே தாக்கல் செய்யப்பட்டிருந்து, யாதொரு ஹைகோாட் ரோவில் அட்வோகேட் - வக்கில் அல்லது அட்டர்னியாகத் தாக்கல். | |
| 28. **சொத்துப்பரிவர்த்தனை ஆதாவு** ... ... ... ... | அந்த ஆதரவில் கண்டிருக்கிறபடி மிகவும அதிக பெறுமானமுள்ள சொத்தின் விலேக்குச் சரியான ஐவேஜுககாக ஏற்பட்ட (21-வது நம்பர்) ஒப்படைப்பத்திரத்திற்குண்டான தீர்வை. |
| எக்ஸ்ட்ராக்ட்—(22 - வது நம்பர்) நகலேப் பார்க்க. | |
| 29. **உடன்சேர்க்கையான பொறுப்பு** ஆதரவு - அதாவது, கொதுவைச் சொத்தின்மேல் உடன்சேர்க்கையான பொறுப்பைச் சுமத்துகிற யர்தொரு ஆதரவு— | |
| (a) ஆதி கொதுவையானது 35 - வது நம்பர் பிரிவு (a) பகுதியில் சொல்லியிருக்கிற வகையானதாயிருந்தால் (அதாவது, ஸ்வாதீனத்துடன்); | அந்த ஆதரவினுல் ஏற்பட்ட உடன்சேர்க்கையான பொறுப்பின் தொகைக்குச் சரியான ஐவேஜுக்காக ஏற்பட்ட (21-வது நம்பர்) ஒப்படைப் பத்திரத்துககுண்டான தீர்வை. |
| (b) அப்படிப்பட்ட கொதுவை - 35 - வது நம்பர் பிரிவு (b) பகுதியில் கண்டிருக்கிற வகையானதாயிருந்தால் (அதாவது, ஸ்வாதீனமில்லாமல்)— | |
| (i) உடன் சேர்கையான பொறுப்பு ஆதரவை எழுதுகிற காலத்தில் சொத்தின் ஸ்வாதீனம் கொடுக்கப்பட்டால், அல்லது அப்படிப்பட்ட ஆதரவை அனுசரித்துக் கொடுக்கும்படி உடன்பட்டால். | ஆதி கொதுவையும் ஏற்கனவே ஏற்படுத்தப்பட்ட யாதொரு அதிகப்படியான பொறுப்பும் சேர்ந்த) பொறுப்பின் மொத்தத் தொகைக்குச் சமானமான ஐவேஜுக்காக ஏற்பட்ட (21-வது நம்பர்) ஒபபடைப் பத்திரத்திற்குண்டான தீர்வையிலே, அப்படிபபட்ட ஆதி கொதுவைப்பத்திரதிற்கும் அதிகப்படி பொறுப்புக்கும் முன்னமே கட்டிவிடப்பட்ட தீர்வை கழிவாக |
| (ii) அப்படி ஸ்வாதீனம் கொடுக்கப்படாவிட்டால் ... ... ... | அந்த ஆதரவினுல் ஏற்பட்ட உடன் சேர்க்கையான பொறப்பின் தொகைக்காக (15-வது நம்பர்) பாட்டம்ரி பாண்டுக்குண்டான தீர்வை. |
| 30. **தானசாஸனம்.**—(51 - வது நம்பர்) பொருத்த ஆதரவு அல்லது உயில் அல்லது (54 - வது நம்பர்) ட்ரான்ஸ்பர் அல்லாதது. | அந்த ஆதரவில் கண்டிருக்கிறபடி சொத்தின் விலேக்குச சரியான ஐவேஜுக்காக ஏற்பட்ட (21 - வது நம்பர்) ஒப்படைப்பத்திரத்துக்குண்டான தீர்வை. |
| கூலிவாங்குவதற்கான உடன்படிக்கை அல்லது ஊழியத்திற்கான உடன்படிக்கை —(5 - வது நம்பர்) உடன்படிக்கைப்பத்திரத்தைப் பார்க்க. | |
| 31. **இண்டெம்னிடி பாண்ட் என்னும் நஷ்ட விமோசனபத்திரம்** ... | அதே தொகைக்கு ஏற்பட்ட (50-வது நம்பர்) பொறுப்புப் பத்திரத்துக்குண்டான தீர்வை. |
| **கண்காணித்தொழிற்சாஸனம்.**—(20 - வது நம்பர்) காம்பொஸிஷன் சாஸனத்தைப் பார்க்க. | |
| 32. **குத்தகை அல்லது வாடகைச்சீட்டு**, கீழ்க்குத்தகை அல்லது உள்குத்தகைச் சீட்டும, வாடகைக்குவிட அல்லது கீழ்வாடகைக்குவிட யாதொரு உடன்படிக்கைச் சீட்டும் இதில் அடக்கம்— | |

| இன்ன ஆதரவுகள். | சரியான முத்திரைத்தீர்வை. |
| --- | --- |
| (a) அந்தச் சீட்டினுலே குத்தகை அல்லது வாடகைத்தொகை நிரணயிககப் பட்டு மேல்வாசி செலுத்தப்படாமலாவது ஒப்பிக்கப்படாமலாவது இருக்கிறபட்சத்தில்— | |
| (i) அந்தக் குத்தகை அல்லது வாடகைக்காலம் ஒரு வருஷத்திற்குக் குறைவாயிருப்பதாகப் பொருள்பட்டால்; | அந்த குத்தகை அலலது வாடகையின பிரகாரம செலுததத்தக்க அலலது ஒப்பிககத்தக்க தொகை முழுவமககும ஏற்பட்ட (15-வது நமபர்) பாட்டமர் பாண்டுக்குண்டான தீர்வை |
| (ii) அந்தக் குத்தகை அல்லது வாடகைக்காலம் ஒருவருஷத்திற்குக் குறையாமலும் ஐந்து வருஷத்திற்கு அதிகப்படாமலும் இருப்பதாகப் பொருளபட்டால்; | குறித்து வைத்துக்கொள்ள பட்ட சராசரி வருஷவாரி குத்தகை அல்லது வாடகையின் தொகை அல்லது மதிப்புக்காக ஏற்பட்ட (15 வது நமபர்) பாட்டமரி பாண்டுக்குண்டான தீர்வை. |
| (iii) அந்தக் குத்தகை அல்லது வாடகைக்காலம் ஐந்து வருஷத்திற்கதிகப் பட்டு பத்து வருஷத்துக்கு அதிகப்படாதிருப்பதாகப் பொருள்பட்டால்; | குறித்து வைத்துக்கொள்ளப் பட்ட சராசரி வருஷவாரி குத்தகை அல்லது வாடகைத் தொகைக்காவது மதிப்புக்காவது சரியான ஐவேஜுக்காக ஏற்பட்ட (21-வது நம்பர்) ஒப்படைப் பத்திரத்துக்குண்டான தீர்வை. |
| (iv) அந்தக் குத்தகை அல்லது வாடகைக்காலம் பத்துவருஷத்துக்கதிகப் பட்டு இருபது வருஷத்துக்கு அதிகப்படாதிருப்பதாகப் பொருள்பட்டால்; | குறித்து வைத்துக்கொள்ளப் பட்ட சராசரி வருஷவாரி குத்தகை அல்லது வாடகைத் தொகைக்காவது மதிப்புக்காவது இரண்டத்தனைக்குச் சரியான ஐவேஜுக்காக ஏற்பட்ட (21-வது நம்பர்) ஒப்படைப் பத்திரத்துக்குண்டான தீர்வை. |
| (v) அந்தக் குத்தகை அல்லது வாடகைக்காலம் இருபது வருஷத்துக்கதிகப் பட்டு முப்பது வருஷத்துக் கதிகப்படாதிருப்பதாகப் பொருள்பட்டால்; | குறித்து வைத்துக்கொள்ளப் பட்ட சராசரி வருஷவாரி குத்தகை அல்லது வாடகைத் தொகைக்காவது மதிப்புக்காவது மூன்றத்தனைக்குச் சரியான ஐவேஜுக்காக ஏற்பட்ட (21-வது நம்பர்) ஒப்படைப் பத்திரத்துக்குண்டான தீர்வை. |
| (vi) அந்தக் குத்தகை அல்லது வாடகைக் காலம் முப்பதுவருஷத்துக்கதிகப் பட்டு நூறுவருஷத்துக்கு அதிகப்படாதிருப்பதாகப் பொருள்பட்டால்; | குறித்து வைத்துக்கொள்ளப் பட்ட சராசரி வருஷவாரி குத்தகை அல்லது வாடகைத் தொகைக்காவது மதிப்புக்காவது நான்கத்தனைக்குச் சரியான ஐவேஜுக்காக ஏற்பட்ட (21-வது நம்பர்) ஒப்படைப் பத்திரத்துக் குண்டான தீர்வை. |
| (vii) அந்தக் குத்தகை அல்வது வாடகைக்காலம் நூறுவருஷத்துக்கதிகப் பட்டாவது எக்காலத்திற்கும சாஸ்வதமாய் இருப்பதாகவாவது பொருள்பட்டால்; | குத்தகை அல்லது வாடகையின் முதல் ஐம்பது வருஷத்திற்காகச் செலுத்தப்படும் அல்லது ஒப்பிக்கப்படும் மொத்த குத்தகை அல்லது வாடகைத்தொகையில் ஆறிலொரு பங்கிற்குச் சரியான ஐவேஜுக்காக ஏற்பட்ட (21-வது நம்பர்) ஒப்படைப் பத்திரத்துக் குண்டான தீர்வை. |
| (viii) அந்தக் குத்தகை அல்லது வாடகை இவ்வளவு காலத்திற்கென்று காலம் குறிப்பதாகப் பொருள்படாவிட்டால்; | குத்தகை அல்லது வாடகை பத்து வருஷகாலத்திற்கு நீடித்திருந்தால், அந்த முதல் பத்து வருஷத்திற்காகச் செலுத்துவதாகவாவது ஒப்பிப்பதாகவாவதிருக்கிற சராசரி வருஷவாரி குத்தகை அல்லது வாடகைத் தொகைக்காகிலும் அதன் மதிப்புக்காகிலும் மூன்றத்தனைக்குச் சரியான ஐவேஜுக்காக ஏற்பட்ட (21-வது நம்பர்) ஒப்படைப் பத்திரத்துக்குண்டான தீர்வை. |
| (b) நஜரான் அல்லது மேல்வாசி அல்லது முன்னதாகக் கொடுத்த பணத்திற்காகக் குத்தகை அல்லது வாடகை விடப்பட்டு, குத்தகை அல்லது வாடகைப்பணம் குறித்துவைக்கப்படாவிட்டால்; | அந்தச் சீட்டில் கண்டிருக்கிற நஜரானு அல்லது மேல்வாசி அல்லது முன்பணத் தொகைக்காவது மதிப்புக்காவது சரியான ஐவேஜுக்காக ஏற்பட்ட (21-வது நம்பர்) ஒப்படைப் பத்திரத்துக் குண்டான தீர்வை. |

1A ஷெட்யூல்—தொடர்ச்சி.

| இன்ன ஆதரவுகள். | சரியான முத்திரைத்தீர்வை. | |
|---|---|---|
| (c) குறித்துவைக்கப்பட்ட குத்தகை அல்லது வாடகைத் தொகையுடன்கூட நஜராணுவுக்காவது மேல்வாசிக்காவது முன்னதாகக்கொடுத்த பணத்திற்காவது குத்தகை அலலது வாடகை விடப்பட்டால். | நஜராணு அல்லது மேல்வாசி அல்லது முன்பணம் செலுத்தப்பட்டாவது ஒப்பிக்கப்பட்டாவதிராத பட்சத்தில் அப்படிப்பட்ட குத்தகை அல்லது வாடகைச் சீட்டுக்குண்டான தீர்வையுடன்கூட அந்தச் சீட்டில் கண்டிருக்கிற நஜராணு அல்லது மேல்வாசி அல்லது முன்பணத் தொகைக்காவது மதிப்புக்காவது சரியான ஐவேஜுக்காக ஏற்பட்ட (21-வது நம்பர்) ஒப்படைப் பத்திரத்துக்குண்டான தீர்வை :<br>ஆனால், குத்தகை அல்லது வாடகைக்கு விடுவதாகச் செய்யப்பட்ட உடன்படிக்கைக்கு மதிப்பின்மேல் குத்தகை அல்லது வாடகைச்சீட்டுக்கு எவ்வளவு முத்திரைவேண்டியதோ அந்த முத்திரை போட்டிருந்து, பின்னிட்டு அந்த உடன்படிக்கையை அனுசரித்து குத்தகை அல்லது வாடகைச்சீட்டு எழுதப்பட்டால், அந்தச் சீட்டுக்குத் தீர்வை எந்த விஷயத்திலும் பன்னிரண்டணுவுக்கு மேற்படக்கூடாது. | |
| நிவாரணைகள்.<br>(a) சாகுபடிசெய்கிறவன் விஷயத்திலும் (ஆகாரம் அல்லது பானத்தை உற்பத்திசெய்ய மரக்குத்தகை உள்பட) சாகுபடி காரியங்களின்பொருட்டும் யாதொரு நஜராணுவாவது மேல்வாசியாவது செலுத்தாமலாகிலும் ஒப்பிக்காமலாகிலும், கால வரையறை நிஷ்கரிஷையாய்த் தெரிவிக்கப்பட்டு, அந்த காலமும் ஒரு வருஷத்துக்கு மேற்படாமலாவது குறித்தெழுதப்பட்ட சராசரி வருஷவாரி குத்தகைத்தொகை நூறு ரூபாய்க்கு அதிகப்படாமலாவது இருக்கையில் எழுதிக்கொடுக்கப்பட்ட குத்தகைச்சீட்டு.<br>(b) 1905-ம்௵த்திய பர்மாதேசத்து மீன்பிடிப்பு ஆக்டின்படியாவது 1889-ம்௵த்து அப்பர் பர்மா லாண்ட் அண்ட் ரெவினியு ரெகுலேஷன்படியாவது கொடுக்கப்பட்ட பாசி குத்தகைச்சீட்டுகள்.<br>**விவரணங்கள்.**—குத்தகைக்கு விடுபவரிடத்திலிருந்து சட்டப்படி வசூலிக்கத் தகுதியான கவர்ன்மெண்ட் கிஸ்தி, ஸெஸ் என்னும் வரிகளில் நிலதத்துக்குடையவருடைய பங்கு அல்லது மியுனிஸிபல் வீதங்களிலாவது வரிகளிலாவது சொந்தக்காரருடைய பங்கு ஆகிய இவைகளைப்போன்ற குறித்த கால அளவுகளுக்கு ஒரு முறையாகச் செலுத்தவேண்டிய தொகைகளைச் செலுத்துவதாக குத்தகைதாரர் ஒப்புக்கொண்டால், அந்தப்படி குத்தகைதாரர் செலுத்துவதாக ஒப்புக்கொண்ட தொகை குத்தகை அல்லது வாடகைத் தொகையின் பாகமாக எண்ணப்படும். | | 1905-ம்௵த்து ப்ர்மா 3-வது ஆக்ட்.<br>1889-ம்௵த்து 3-வது ஆக்ட். |
| **லெட்டர் ஆவ் காரண்டி** (ஜாமீன் சீட்டு).—(5-வது நம்பர்) உடன்படிக்கைப் பத்திரத்தைப் **பார்க்க.** | | |
| 33. **வாயிதாச் சீட்டு**, அதாவது - கடன் கொடுத்தவர்கள் குறிக்கப்பட்ட ஒரு காலம் வரையில் தங்கள் கடனைக் கேளாமல், கடன் வாங்கிக்கொண்டவரை அவருடைய யுக்தப்பிரகாரம் வியாபாரத்தை நடத்த விட்டுகிறதாகக் கடன் கொடுத்தவர்களுக்கும் கடன் வாங்கினவருக்கும் ஏற்படுகிற யாதொரு உடன்படிக்கை. | பதினைந்து ரூபாய். | |
| 34. **ஒரு கம்பெனியாருடைய கூட்ட யாதாஸ்து.**— | | |
| (a) 1913-ம்௵த்திய இந்துதேசத்து கம்பெனிகளைக்குறித்த ஆக்ட் 17-வது பிரிவின்படி கூட்டத்து நியமங்கள் சேர்க்கப்பட்டிருந்தால். | முப்பது ரூபாய். | 1913-ம்௵த்து 7-வது ஆக்ட். |
| (b) அப்படி சேர்க்கப்பட்டிராவிட்டால் .. .. .. .. .. | எண்பது ரூபாய். | |
| நிவாரணைகள்.<br>இலாபத்துக்காக ஏற்படுத்தப்படாமலும் 1913-ம்௵த்திய இந்துதேசத்து கம்பெனிகளைக்குறித்த ஆக்ட் 26-வது ரிவின்படி ரெஜிஸ்டர் செய்யப்பட்டும் இருக்கிற யாதொரு கூட்ட யாதாஸ்து. | | 1913-ம்௵த்து 7-வது ஆக்ட். |
| 35. **கொதுவைப் பத்திரம்** —(6 வது நம்பர்) ஆட்சிபத்திரங்களைக் கட்டுவதற்காகிலும் அடகு அல்லது அடமானத்துக்காகிலும் சம்பந்தப்பட்டிருக்கிற உடன்படிக்கைப் பத்திரமாவது, (15-வது நம்பர்) பாட்டம்ரி பாண்டாவது, (36-வது நம்பர்) சாகுபடி கொதுவைப் பத்திரமாவது, (49-வது நம்பர்) கப்பற்சரக்கு அடமானப் பத்திரமாவது, (50-வது நம்பர்) பொறுப்பு பத்திரமாவது அல்லாதது— | | |
| (a) கொதுவைவைக்கிறவர் அந்தப் பத்திரத்தில் கண்டிருக்கிற சொத்தையாவது அதில் யாதொரு பாகத்தையாவது ஸ்வாதீனஞ்செய்தாலும் ஸ்வாதீனஞ்செய்ய உடன்பட்டாலும் ; | அந்த பத்திரத்தினல் ஏற்பட்ட தொகைக்குச் சரியான ஐவேஜுக்காக (21-வது நம்பர்) ஒப்படைப் பத்திரத்துக்குண்டான தீர்வை. | |

| இன்ன ஆதரவுகள். | சரியான முத்திரைத் தீர்வை. |
|---|---|
| (b) மேற்சொல்லியபடி ஸ்வாதீனஞ் செய்யாவிட்டாலும் செய்ய உடன்படாவிட்டாலும் ; | அந்தப் பத்திரத்தினால் ஏற்பட்ட தொகைக்காக (15-வது நம்பர்) பாட்டமரி பாண்டுக்குண்டான தீர்வை. |
| **விவரணம்.**—கொதுவைவைப்போர் கொதுவை வைத்துக்கொண்டவருக்கு வாடகைகளை வசூல்பண்ண பவர் ஆவ் அட்டர்னியையாவது கொதுவை வைக்கப்பட்ட சொத்தின் அல்லது அதன் பாகத்தின் யாதொரு குத்தகைச் சீட்டையாவது கொடுத்தால், ஷை கொதுவைவைப்போர் இந்தப் பகுதியின் அர்த்தத்தின்படி ஸ்வாதீனம் தருபவராக எண்ணப்படுகிறார். | |
| (c) சார்பான அல்லது உதவியான அல்லது அதிகப்படியான அல்லது பர்த்தி செய்யப்பட்ட பொறுப்புப் பத்திரமாயாவது மேல்சொன்ன விஷயத்துக்காக இன்னும் அதிக உறுதியின் நிமித்தம் செய்யப்பட்டதாகவாவதிருந்து பிரதானமான அல்லது பிரதமமான (ப்ரைமெரி) பொறுப்புப்பத்திரமானது தகுந்தபடி முத்திரையிடப்பட்டிருந்தால்— | |
| ஏற்படுகிற தொகை 1,000 ரூபாய்க் கதிகப்படாவிட்டால் பிரதி தொகைக்கும் ; | பன்னிரண்டு அணா. |
| 1,000 ரூபாய்க்கு மேற்பட்டு ஏற்படுகிற பிரதி 1,000 ரூபாய்க்காவது அதன் பாகத்துக்காவது. | ஷை. |
| **நிவாரணைகள்.** | |
| 1883-ம் வருஷத்து 19-வது ஆக்ட். 1884-ம் வருஷத்து 12-வது ஆக்ட். (1) நிலவிருத்திசம்பந்தமான கடன்களைக்குறித்த 1883 ம் வருஷத்து ஆக்டின்படி அல்லது விவசாயக்காரர்களுக்குக் கடன் கொடுப்பதைக்குறித்த 1884-ம் வருஷத்து ஆக்டின்படி முன்பணம் வாங்கிக்கொள்ளுகிறவர்களாலாவது அவர்களுடைய ஜாமீன்தாரர்களாலாவது அந்த முன்பணத்தைத் திருப்பிச் செலுத்துவதற்கு ஈடாக எழுதிக்கொடுக்கப்பட்ட ஆதரவுகள். | |
| (2) சொத்தை ஈடாகக் காட்டி பில் ஆவ் எக்ஸ்சேஞ்ஜோடுகூட வருகிற சீட்டு. | |
| **36. யாதொரு சாகுபடிக் கொதுவை ஆதரவு.**—கொதுவைக்காலத்தில் சாகுபடி உண்டாயிருந்தாலும் உண்டாயிராவிட்டாலும் யாதொரு சாகுபடியைக் கொதுவை வைத்துக்கொண்டு கொடுக்கப்பட்ட கடனைத் திரும்பக் கொடுப்பதை உறுதிப்படுத்திக்கொள்ள உடன்படிக்கையாகிற யாதொரு ஆதரவு இதிலடக்கம்— | |
| (a) ஆதரவுச்சீட்டின தேதியிலிருந்து மூன்று மாதத்துக்கு மேற்படாமல் கடன் திரும்பக் கொடுக்கப்படுவதாக இருந்தால்— | |
| 200 ரூபாய்க்கு மேற்படாமல் கிடைத்த பிரதி தொகைக்கும் .. .. | இரண்டு அணா. |
| 200 ரூபாய்க்கு மேற்பட்டுக் கிடைத்த பிரதி 200 ரூபாய்க்காவது அதன் பாகத்துக்காவது. | ஷை. |
| (b) ஆதரவுச்சீட்டின் தேதியிலிருந்து மூன்று மாதத்திற்கு மேற்பட்டு பதினெட்டு மாதத்துக்கு மேற்படாமல் கடன் திரும்பக்கொடுக்கப்படுவதாக இருந்தால்— | |
| 100 ரூபாய்க்கு மேற்படாமல் கிடைத்த பிரதி தொகைக்கும் .. .. | மூன்று அணா. |
| 100 ரூபாய்க்கு மேற்பட்டுக் கிடைத்த பிரதி 100 ரூபாய்க்காவது அதன் பாகத்திற்காவது. | ஷை. |
| **37. நோடேரியல் ஆக்ட்.**—அதாவது நோட்டரி பப்ளிக் என்னும் அதிகாரி தம்முடைய உத்தியோக அலுவல்களை நிறைவேற்றுகையில் அவராலாவது, நோட்டரி பப்ளிக் என்னும் அதிகாரியைப்போலச் சட்டப்படி பிரவர்த்திக்கிற வேறே எவராலாவது எழுதப்பட்டாகிலும் கையெழுத்து செய்யப்பட்டாகிலுமிருக்கிற யாதொரு ஆதரவு - எண்டார்ஸ்மென்ட் - நோட், அத்தாட்சி - ஸெர்டிபிகேட் அல்லது (44-வது நம்பர்) ப்ரொடெஸ்ட் அல்லாத பதிவு. | ஒரு ரூபாய் எட்டு அணா. |
| (44-வது நம்பர்) ப்ரொடெஸ்ட் ஆவ் பில் அல்லது நோட்டையும் பார்க்க. | |
| 38. முதலாளிக்காக அடியிற்கண்டதைக் கொண்டது அல்லது விற்றதை ஷை முதலாளிக்குத் தெரிவித்து யாதொரு தரகிரியாலாவது ஏஜெண்டாலாவது அனுப்பப்பட்ட **குறிப்பு அல்லது யாதாஸ்து**— | |
| (a) 20 ரூபாய் விலைக்கு மேற்பட்ட யாதொரு சரக்குக்கு .. .. .. | மூன்று அணா. |
| (b) 20 ரூபாய் விலைக்கு மேற்பட்ட யாதொரு (ஸ்டாக்) முதற்பங்கு அல்லது விற்கத்தக்க பத்திரத்துக்கு. | பதினைந்து ரூபாய்க்கு மேற்படக்கூடாதென்பதற்குட்பட்டு, அந்த முதற்பங்கு அல்லது பத்திரத்தின் விலைமதிப்பில் பிரதி 10,000 ரூபாய் அல்லது அதன் பாகத்துக்கும் இரண்டு அணா. |
| **39. கப்பல் மாஸ்டரின் ப்ரோடெஸ்ட் நோட்** .. .. .. .. | ஒரு ரூபாய். |
| (45-வது நம்பர்) கப்பல் மாஸ்டருடைய ப்ரொடெஸ்டையும் பார்க்க. | |

## 1A ஷெட்யூல்—தொடர்ச்சி.

| [இன்ன ஆதரவுகள். | சரியான முத்திரைத் தீர்வை. |
|---|---|
| **40. பாரிகத்து** [2 - (15)-வது பிரிவில் விளக்கினபிரகாரம்] .. .. .. | சொத்திலிருந்து பிரிக்கப்பட்ட பாகம் அல்லது பாகங்களின் மதிப்புக்குச் சரியான தொகைக்காக ஏற்பட்ட (15 வது நம்பர்) பாட்டம்ரி பாண்டுக்குண்டான தீர்வை. |

**குறிப்பு.**—சொத்தைப் பாகஞ்செய்துகொண்டபிறகு மிகுதியாயிருக்கும் உச்சமான பாகமானது (அல்லது இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட பாகங்கள் சமமான மதிப்புடையதாகவிருந்து மற்ற பாகங்கள் எதைப்பார்க்கிலும் சிறியதாயிராதபட்சத்தில், அவ்வித சமமான பாகங்களில் ஒன்று) மற்ற பாகங்கள் எதிலிருந்து பிரிக்கப்பட்டனவோ அதுவாக எண்ணப்படும் :

ஆனால் எப்போதும்—

(a) சொத்தைத் தனித்தனியாக பாகஞ்செய்துகொள்ளும்படியான யாதொரு உடன்படிக்கை அடங்கிய பாரிகத்தாதரவு எழுதப்பட்டு மேற்படி உடன்படிக்கையின்பிரகாரம் பாகஞ்செய்துக்கொள்ளப்பட்டால், எந்த ஆதரவைக்கொண்டு பாகஞ்செய்துகொள்ளப்படுகிறதோ அந்த ஆதரவின் விஷயமாய விதிக்கப்படவேண்டிய தீர்வையிலிருந்து, முந்திச்சொல்லிய ஆதரவின் விஷயமாய்ச் செலுத்தப்பட்டிருக்கும் தீர்வைத்தொகையைக் கழித்துவிடவேண்டும் ; ஆனால், அது பன்னிரண்டு அணுவுக்குக் குறைந்ததாயிருக்கக்கூடாது ;

(b) முப்பது வருஷத்துக்கு மேற்படாத காலம்வரையில் ரெவினியு ஸெட்டில்மென்ட் ஏற்பாட்டின்படி அனுபவிக்கப்படுவதும் பூரணமான வரியைச் செலுத்துவதுமான நிலத்தின் விஷயத்திலே, தீர்வைக்காக அதன்மதிப்பை வருஷாந்தர ரெவினியுவுக்கு ஐந்தத்தனைக்கதிகமாகக் கணக்கிடக்கூடாது ;

(c) பாகம்செய்துகொள்ளும்பொருட்டு யாதொரு ரெவினியு அதிகாரி அல்லது ஸிவில் கோர்ட்டாரால் பிறப்பிக்கப்பட்ட முடிவான உத்தரவுக்காகிலும், பாகம் செய்துகொள்ள வேண்டுமென்று சொல்லி மத்தியஸ்தர் செய்யும் தீர்மானத்துக்காகிலும் பாரிகத்தாதரவுக்கு வேண்டியிருக்கிற முத்திரையிட்டிருந்து, அந்த உத்தரவு அல்லது தீர்மானத்தின்படி பாரிகத்து ஆதரவு ஒன்று அப்புறம் எழுதப்பட்டால், அந்த ஆதரவின்மேல் விதிக்கப்படவேண்டிய தீர்வை பன்னிரண்டு அணுவுக்கு அதிகப்படக்கூடாது.

| | |
|---|---|
| **41. A - கூட்டுப்பங்கு ஆதரவு.**— | |
| (a) கூட்டுப்பங்கின் முதற்பணம் 500 ரூபாய்க்கு மேற்படாவிட்டால் .. | ஐந்து ரூபாய். |
| (b) வேறே யாதொரு விஷயத்தில் .. .. .. .. | இருபது ரூபாய். |
| **B - கூட்டுப்பங்கு பிரிவினை ஆதரவு** .. .. .. .. | பத்து ரூபாய். |
| **அடகு அல்லது அடமானம்.**—(6-வது நம்பர்) ஆட்சிப்பத்திரங்களைக்கட்டுவதற்காவது அடகு அல்லது அடமானத்துக்காவது சம்பந்தப்பட்டிருக்கிற உடன்படிக்கைப் பத்திரிகையைப் பார்க்க. | |
| **42. பவர் ஆவ் அட்டார்னி** (வக்காலத்து நாமா) [2 (21) பிரிவில் விளக்கப்பட்ட பிரகாரம்] பிரதிகாரியஸ்தருக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரபத்திரமல்லாதது,— | |
| (a) ஒரே ஒரு காரியத்தைபபற்றி ஒன்று அல்லது பல தஸ்தவேஜுகளை ரெஜிஸ்ட்ரேஷன் செய்வதற்காக மாத்திரம் எழுதப்பட்டால் அல்லது அப்படிப்பட்ட தஸ்தவேஜுகளில ஒன்றையாவது பலவற்றையாவது எழுதினதாக ஒப்புக்கொள்வதற்காக எழுதப்பட்டால் ; | பன்னிரண்டு அணு. |
| (b) 1882-ம் ௵த்து ப்ரெஸிடென்ஸி ஸ்மால்காஸ் கோர்ட்டுகள் ஆக்டின்படி வியாஜ்ஜியங்களிலாவது நடவடிக்கைகளிலாவது தேவையாக இருந்தால் ; | ஷை. (1882-ம் ௵த்து 15-வது ஆக்ட்.) |
| (c) (a) குறிப்பிட்ட பகுதியில் கண்டிருக்கிற விஷயம் அல்லாத வேறு ஒரே ஒருகாரியத்தில் விவகரிக்க ஒருவர் அல்லது பலருக்கு அதிகாரம் கொடுத்தால் ; | ஒரு ரூபாய் எட்டு அணு. |
| (d) ஒன்றல்லாமல் பலகாரியங்களிலாவது பொதுவாகவாவது ஐந்துபேருக்கு அதிகப்படாதவர்கள் கூட்டாகவும் தனித்தனியாகவும் விவகரிக்க அதிகாரம் கொடுத்தால் ; | எழு ரூபாய் எட்டு அணு. |
| (e) ஒன்றல்லாமல் பல காரியங்களிலாவது பொதுவாகவாவது ஐந்துபேருக்கு மேற்பட்டுப் பத்துபேருக்கு அதிகப்படாதவர்கள் கூட்டாகவும் தனித்தனியாகவும் விவகரிக்க அதிகாரம் கொடுத்தால். | பதினைந்து ரூபாய். |
| (f) ஐவேஜுக்காகவும் யாதொரு அசையாப்பொருளை விற்பனைசெய்ய அட்டர்னிக்கு அதிகாரம் கொடுப்பதற்காகவும் கொடுத்தால். | ஐவேஜின் தொகைக்கு ஏற்பட்ட (21-வது நம்பர்) ஒப்படைப் பத்திரத்துக்குண்டான தீர்வை. |
| (g) வேறே யாதொரு விஷயத்தில் .. .. .. .. | அதிகாரம் கொடுக்கப் பெறுகிற பிரதி நபருக்கும் ஒரு ரூபாய் எட்டு அணு. |
| | **குறிப்பு.**—"ரெஜிஸ்ட்ரேஷன்" என்னும் வார்த்தையிலே 1908-ம் ௵த்திய இந்துதேசத்து ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்டின்படி செய்யப்படும் ரெஜிஸ்ட்ரேஷனுக்கு இடைச்சம்பவமாயிருக்கிற ஒவ்வொரு காரியமும் அடங்கும். (1908-ம் ௵த்து 16-வது ஆக்ட்.) |

**விவரணம்.**—இந்தப் பகுதியின் காரியங்களுக்காக ஒருவரல்லாமல் பலர் ஒரே வர்த்தகக் கூட்டத்தைச் சேர்ந்தவர்களாயிருந்தால் அவர்களை ஒருவராகவே எண்ணவேண்டும்.

| இன்ன ஆதரவுகள். | சரியான முத்திரைத் தீர்வை. |
| --- | --- |
| **43. ப்ராமிஸோரிநோட்**—[2 (22)-வது பிரிவில் விளக்கப்பட்ட பிரகாரம்] :—<br>(a) கேட்கப்படுவதன் மேலல்லாமல் மற்றப்படியும (குறிப்பிட்ட) தேதிக்குப் பிறகாகிலும் தரிசனத்துப்பிறகாகிலும் ஒருவருஷத்துக்கு மேறபடாமலும் பணம் கொடுக்கத்தக்கதாயிருந்தால் ; | கிடைத்த தொகைக்கு 6-வது பகுதியைச் சேர்ந்த (a) குறிப்பிட்ட உட்பகுதியின் (i) அடையாளமிட்ட பாகத்தின்படிக்காவது (a) குறிப்பிட்ட உட்பகுதியின் (ii) அடையாளமிட்ட பாகத்தின் படிக்காவது யாதொரு கடன் அல்லது பாக்கிக்காகச் செலுத்தத்தகக தீர்வை. |
| (b) (குறிப்பிட்ட) தேதிக்குப் பிறகாகிலும் தரிசனத்துக்குப் பிறகாகிலும் ஒரு வருஷத்துககு மேற்பட்டு செலுத்தத்தக்கதாயிருந்தால். | அதே தொகைக்கு (15-வது நம்பர்) பாட்டம்ரி பாண்டுக்குண்டுக்குண்டான தீர்வை. |
| **44. ப்ரோடஸ்ட் ஆவ் பில் அல்லது நோட்**, அதாவது - பில் ஆவ் எக்ஸ்சேஞ்ஜ் அல்லது ப்ராமிஸொரி நோட்டை அலட்சியஞ் செய்ததற்கு அத்தாட்சியாகக கையெழுத்துபண்ணி, நோட்டரி பப்ளிக் என்னும் அதிகாரியாவது சட்டப்படி அப்படிப்பட்டவராகப் பிரவர்த்திக்கிற வேறொருவராவது எழுதிக்கொடுக்கிற யாதொரு அத்தாட்சிப்பத்திரிகை. | இரண்டு ரூபாய். |
| **45. கப்பல் மாஸ்டருடைய ப்ரோடெஸ்ட்**, அதாவது - நஷ்டங்களைச் சரிப்படுத்தவேண்டுமென்கிற எண்ணத்தோடாவது சரக்கேற்றினவர்கள் நஷ்டத்துக்காகக் கட்டிக்கொடுக்கவேண்டிய தொகையைக் கணக்கேற்படுத்த வேண்டுமென்கிற எண்ணத்தோடாவது கப்பல் சபரின் விவரங்களைக்குறித்து அந்தக் கப்பல் மாஸ்டர் எழுதுகிற யாதொரு உறுதிப்பத்திரிகையும், கப்பலில் சரக்கேற்றுமைக்காகவாவது அதிலிருந்து இறக்காமைக்காகவாவது கப்பலை வாடகைக்கு அமர்த்திக்கொண்டவர்கள் பெயரிலாகிலும் சரக்கை யாரிடத்தில் ஒப்பிக்கவேண்டியதோ அவர்கள் பெயரிலாகிலும் அந்த கப்பல் மாஸ்டர் எழுதுகிற பிரதி உறுதிப் பத்திரிகையும், அப்படிப்பட்டது நோட்டரி பப்ளிக் என்னும் அதிகாரியினலாவது அப்படிப்பட்டவராகச் சட்டப்படி பிரவர்த்திக்கிற வேறே எவராலாவது அத்தாட்சி கையெழுத்து செய்யப்பட்டாகிலும் ஸெர்டிபை செய்யப்பட்டாகிலுமிருந்தால்.<br>(39-வது நம்பர்) கப்பல் மாஸ்டரின் ப்ரொடெஸ்ட் நோட்டையும் பார்க்க. | இரண்டு ரூபாய். |
| **46. ரசீது.**—[2 (23)-வது பிரிவில் விளக்கப்பட்ட பிரகாரம்] இருபது ரூபாயககு மேற்பட்ட யாதொரு தொகைக்காவது இருபது ரூபாய்க்கு மேற்பட்ட தொகை அலலது மதிப்புள்ள வேறே சொத்துக்காவது ரசீது. | இரண்டு அணா. |
| **நிவாரணைகள்.**<br>ரசீது—<br>(a) கிரமமாய் முத்திரை போடப்பட்டாகிலும் (கவர்ன்மென்ட் சார்பிலே எழுதப்பட்ட ஆதரவுகள்) 3-வது பிரிவின் விலக்கு நிபந்தனையின்படி நிவாரணைசெய்யப்பட்டாகிலுமிருக்கிற யாதொரு ஆதரவிலே கண்டிருக்கிற ஐவேஜு தொகையைப் பற்றிக்கொண்டதாகவாகிலும், அதில் கண்டிருக்கிற யாதொரு அசல் பணம்-வட்டி-வருஷ வாரித்தொகை அல்லது வேறே காலக்கிரமமான செல்லுத்தொகையைப் பற்றிக்கொண்டதாகவாகிலும் ஒப்புக்கொண்டு அந்த ஆதரவின்மேலாவது அதிலாவது எழுதப்பட்டது ;<br>(b) ஐவேஜில்லாமல் பணம் செலுத்துவதற்காகக் கொடுக்கப்பட்டது ;<br>(c) ஸர்க்கார் கிஸ்திக்காகத் தீர்வைபோட்டிருக்கிற நிலத்தின்பொருட்டாவது (சென்னபட்டணம் ப்ரெஸிடென்ஸியிலும் பம்பாய ப்ரெஸிடென்ஸியிலும்) இனும் நிலங்களின் பொருட்டாவது குத்தகைத்தொகையைச் சாகுபடிதாரர் செலுத்துவதற்காகக் கொடுக்கப்பட்டது ;<br>(d) மஹாராஜ சக்ரவர்த்தியவர்களுடைய சேனையிலாவது மஹாராஜ சக்ரவர்த்தியவர்களுடைய இந்தியசேனையிலாவது இருக்கிற நன்கம்மிஷண்ட் ஆபிஸர்களாகிலும் படைச்சேவகர்களாகிலும் அந்த ஹோதாவில் ஊழியம்செய்துகொண்டிருக்கையில் அவர்களாலாவது குதிரைச்சவாரியுடைய பொலீஸ்கான்ஸ்டபில்களாலாவது சம்பளத்திற்காகவாகிலும் வர்த்தனைகளுக்காகவாகிலும் கொடுக்கப்பட்டது ;<br>(e) ரசீதில் கண்ட தொகையானது யாருடைய சம்பளம் அல்லது வர்த்தனையிலிருந்து சாட்டப்பட்டதோ அந்த நபர் ஷை இரண்டுசேனைகளிலொன்றிலாவது நன்கம்மிஷண்ட் ஆபிஸராகவாகிலும் படைச்சேவகராகவாகிலும் ஊழியஞ் செய்து கொண்டிருக்கும் விஷயங்களில் குடும்பஸெர்டிபிகேட்டுகளையுடையவர்கள் கொடுத்தது ;<br>(f) அப்படிப்பட்ட நன்கம்மிஷண்ட் ஆபிஸர்களாகவாகிலும் படைச்சேவகர்களாகவாகிலும் ஊழியம் செய்துகொண்டிருந்ததைப்பற்றி பென்ஷனாவது வர்த்தனையாவது பெற்றுக்கொண்டு வேறே யாதொரு ஹோதாவில் ஸர்க்காரில் ஊழியம் செய்யாதிருக்கிறவர்களால் அந்த பென்ஷனுக்காகவாவது வர்த்தனைக்காகவாவது கொடுக்கப்பட்டது ;<br>(g) யாதொரு தலைவர் அல்லது லம்பர்தாரினால் வசூல்செய்யப்பட்ட நிலத்தீர்வை அல்லது வரிகளுக்காக அவரால் கொடுக்கப்பட்டது ;<br>(h) உத்தரவாதஞ் செய்யும்படியாக யாதொரு ஸாவ்காரிடத்திலே கட்டப்பட்ட பணத்திற்காகவாவது பணத்தைச்சேர்ந்த பத்திரங்களுக்காகவாவது கொடுக்கப்பட்டது ;<br>ஆனால், யாருக்கு அது உத்தரவாதம் செய்யும்படியாயிருக்கிறதோ அவர் தவிர வேறே நபரிடத்திலிருந்தாவது அந்த நபராவது பெற்றுக்கொண்டதாக அதில் கண்டிருக்கக்கூடாது : | |

## 1A ஷெட்யூல்—தொடர்ச்சி.

| இன்ன ஆதரவுகள். | சரியான முத்திரைத் தீர்வை. |
|---|---|
| மேலும், சட்டப்படி ஏற்பட்ட யாதொரு கம்பெனியிலாவது அல்லது சட்டப்படி ஏற்பட்ட வேறே கூட்டத்திலாவது அல்லது இப்படிப்பட்ட உத்தேசமான அல்லது எத்தனிக்கப்பட்ட கம்பெனியிலாவது கூட்டத்திலாவது அப்படிப்பட்ட கம்பெனி அல்லது கூட்டத்தாருடையதாகவாவதிருக்கிற பங்கு கொடுக்கப்படுவதற்கான சீட்டுக்காகவாகிலும் சீட்டின்மேலாகிலும், யாதொரு ஸ்க்ரிப் அல்லது பங்குக்காகப் பணஞ்செலுத்தும்படி கேட்கப்படுவதைக்குறித்தாகிலும் அல்லது யாதொரு டிபென்சர் விற்பனை செய்யத்தக்க பத்திரமாக இருப்பதைக் குறித்தாகிலும் செலுத்தப்பட்ட அல்லது கட்டப்பட்ட தொகைக்காகக் கொடுக்கப்பட்ட ரசீது அல்லது பற்றுச் சீட்டுக்கு இந்த நிவாரணை சம்பந்தப்படமாட்டாது. | |
| **47. கொதுவைச்சொத்தை மறுபடி ஒப்பித்துவிடுவதற்கான ஆதரவு—** | |
| (a) எவ்வளவுக்குச் சொத்து கொதுவை வைக்கப்பட்டதோ அந்த ஐவேஜு 1,000 ரூபாய்க்கு மேற்படாவிட்டால்; | இந்த ஆதரவில் கண்டிருக்கிற ஐவேஜு தொகைக்காக ஏற்பட்ட (21-வது நம்பர்) ஒப்படைப் பத்திரத்துக்குண்டான தீர்வை. |
| (b) வேறே யாதொரு விஷயத்தில் .. .. .. .. .. | பதினைந்து ரூபாய். |
| **48. விடுதலைப்பத்திரம்.**—அதாவது - ஒருவர் வேறொருவர் மேலாவது குறித்த யாதொரு சொத்தின்மேலாவது தாவாவை விட்டுவிடுகிறதாக எழுதிக்கொடுக்கிற யாதொரு ஆதரவு (23-A குறிப்பிட்ட பிரிவினால் நிபந்தனை கண்டிருக்கும் விடுதலைச்சீட்டாய் இராதது)— | |
| (a) தாவாத்தொகை அல்லது மதிப்பு 1,000 ரூபாய்க்கு மேற்படாவிட்டால் .. | விடுதலைப்பத்திரத்தில் கண்டிருக்கிற தொகை அல்லது மதிப்புக்காக ஏற்பட்ட (15-வது நம்பர்) பாட்டம்ரி பாண்டுக்குண்டான தீர்வை. |
| (b) வேறே யாதொரு விஷயத்தில் .. .. .. .. .. | எழு ரூபாய் எட்டு அணா |
| **49. கப்பற்சரக்கு அடமான பத்திரம்,**—அதாவது, கப்பலில் ஏற்றப்பட்டாவது ஏற்றப்படுவதாகவாவதிருக்கிற சரக்குகளின்மேல் கடன்வாங்கிக்கொண்டு, குறிக்கப்பட்ட ரேவில் சரக்குபோய்ச்சேருமாகில திருப்பப் பணஞ்செலுத்துவதாகக் கண்டெழுதிக் கொடுக்கப்பட்ட யாதொரு ஆதரவு. | கிடைத்த கடன் தொகைக்கு ஏற்பட்ட (15-வது நம்பர்) பாட்டம்ரி பாண்டுக்குண்டான தீர்வை. |
| யாதொரு ட்ரஸ்ட் அல்லது ஸெட்டில்மெண்ட் ரத்து.—(51-வது நம்பர்) பொருத்த ஆதரவையும் (56-வது நம்பர்) ட்ரஸ்டையும் பார்க்க. | |
| **50. பொறுப்புப்பத்திரம் அல்லது கொதுவைப்பத்திரம்,**—யாதொரு அலுவலைக் கிரமமாய் நிறைவேற்றவாவது, அந்த அலுவலை அனுசரித்துப் பெற்றுக்கொண்ட பணத்துக்கோ அல்லது இதர சொத்துக்கோ வகை சொல்லவாவது பொறுப்பாக எழுதிக்கொடுக்கப்பட்டது, அல்லது யாதொரு காண்ட்ராக்டைச் சரிவர நடத்தும் பொருட்டு உறுதிப்பத்திரமாக எழுதிக்கொடுக்கப்பட்டது— | |
| (a) ஏற்பட்ட தொகை 1,000 ரூபாய்க்கு மேற்படாவிட்டால் .. .. | ஏற்பட்ட தொகைக்கு (15-வது நம்பர்) பாட்டம்ரி பாண்டுக்குண்டான தீர்வை. |
| (b) வேறே யாதொரு விஷயத்தில் .. .. .. .. .. | எழு ரூபாய் எட்டு அணா. |

### நிவாரணைகள்.

பாண்ட் அல்லது வேறு ஆதரவு—

(a) 1876-ம் வருஷத்திய வங்காளத்து இரிகேஷன் ஆக்ட் 99-வது பிரிவின்படி தங்களுடைய அலுவல்களைச் சரியாகச் செய்வதற்காக, அதை அனுசரித்துச் செய்யப்பட்ட விதிகளின்படி நியமிக்கப்பட்ட தலைவர்களால் எழுதிக்கொடுக்கப்பட்டால்; 1876-ம் வருஷத்திய 3-வது வங்காளத்து ஆக்ட்.

(b) தரும டிஸ்பென்ஸரி அல்லது ஆஸ்பத்திரிக்காவது அசேஷ ஜன உபயோகத்திற்கான வேறே யாதொரு விஷயத்திற்காவது ஜனங்கள் செய்திருக்கும் கையொப்பத்தினால் கிடைக்கும் பிரதேச வரும்படி மாதமொன்றுக்குக் குறித்த தொகைக்குக் குறையாதென்று உத்தரவாதஞ் செய்யும்பொருட்டு யாதொரு நபரால் எழுதிக்கொடுக்கப்பட்டால்;

(c) 1879-ம் வருஷத்து பம்பாய் இரிகேஷன் ஆக்ட் 70-வது பிரிவின்படி ஆலோசனை சபையிலுள்ள பம்பாய் கவர்னரவர்களால் செய்யப்பட்ட விதிகளில் 3-A குறிப்பிட்ட விதியை அனுசரித்து எழுதிக்கொடுக்கப்பட்டால்; 1879-ம் வருஷத்து 7-வது பம்பாய் ஆக்ட்.

(d) நிலவிருத்தி சம்பந்தமான கடன்களைக்குறித்த 1883-ம் வருஷத்து ஆக்டின்படி அல்லது விவசாயக்காரர்களுக்குக் கடன் கொடுப்பதைக்குறித்த 1884-ம் வருஷத்து ஆக்டின்படி முன்பணம் வாங்கிக்கொள்ளுகிறவர்களாலாவது அவர்களுடைய ஜாமீன்தாரர்களாலாவது அந்த முன்பணத்தை திரும்பச் செலுத்துவதற்கு ஈடாக எழுதிக்கொடுக்கப்பட்டால்; 1883-ம் வருஷத்து 19-வது ஆக்ட். 1884-ம் வருஷத்து 12-வது ஆக்ட்.

(e) கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்களாலாவது அவர்களுடைய ஜாமீன்தாரர்களாலாவது யாதொரு உத்தியோகத்தைக் கிரமமாய் நிறைவேற்றுவதைப்பற்றியாகிலும் அந்த உத்தியோகமுறைமையில் வரப்பற்றிக்கொள்ளப்பட்ட பணத்துக்கோ அல்லது வேறே சொத்துக்கோ கிரமமாய் உத்தரிப்பதைப்பற்றியாகிலும் எழுதிக்கொடுக்கப்பட்டால்.

1A ஷெட்யூல்—தொடர்ச்சி.

| இன்ன ஆதரவுகள். | சரியான முத்திரைத் தீர்வை. |
| --- | --- |
| 51. பொருத்தம்.—<br>A.—பொருத்த ஆதாவு (சீதனப்பத்திரம் இதில் அடக்கம்) .. .. .. | அந்தப் பொருத்த ஆதரவில் கண்டிருக்கிறபடி பொருத்தப்பட்ட தொகை அல்லது சொத்தின் கிரயத்துக்குச் சரியான தொகைக்காக ஏற்பட்ட (15-வது நம்பர்) பாட்டம்ரி பாண்டுக்குண்டான தீர்வை.<br>ஆனால், பொருந்துவதற்கான யாதொரு உடன்படிக்கைக்குப் பொருத்த ஆதரவின்மேல் எவ்வளவு முத்திரை போடவேண்டியதோ அந்த முத்திரை போட்டிருந்து, பின்னிட்டு அந்த உடன்படிக்கையை அனுசரித்துப் பொருத்த ஆதரவு ஒன்று எழுதப்பட்டால், அந்த ஆதரவுக்குத் தீர்வை பன்னிரண்டு அணுவுக்கு மேற்படக்கூடாது. |
| நிவாரணைகள்.<br>(a) விவாககாலத்தில் மகம்மதியருக்குள் எழுதிக்கொடுக்கப்பட்ட சீதனப்பத்திரம்.<br>(b) ஷ்ளுடாஸ்ஸா, அதாவது, மதிப்பு இவ்வளவென்று குறிக்காமலும் 10 ரூபாய் தீர்வை கட்டியும் யாதொரு மதசம்பந்தமான காரியத்துக்காக பர்மாவிலே யாதொரு புத்தமதஸ்தரால் எழுதிக்கொடுக்கப்பட்ட ஸ்தாவரப்பொருளின் யாதொரு பொருத்தம். | |
| B.—பொருத்த ஆதரவு ரத்து .. .. .. .. .. ..<br>(56-வது நம்பர்) ட்ரஸ்டையும் பார்க்க. | பொருத்தம் ரத்து செய்யப்படும் ஆதரவில் கண்டிருக்கிறபடி அதில் சம்பந்தப்பட்ட தொகை அல்லது சொத்தின் மதிப்புக்குச் சரியான தொகைக்காக ஏற்பட்ட (15 வது நம்பர்) பாட்டம்ரி பாண்டுக்குண்டான தீர்வை; ஆனால் பதினைந்து ரூபாய்க்கு மேற்படக்கூடாது. |
| 1913-ம் வருஷத்து 7-வது ஆக்ட். 52. பங்கு வாரன்டுகள்.—கொண்டுவருகிறவருக்கு 1913-ம் வருஷத்திய இந்துதேசத்து கம்பெனிகளைக் குறித்த ஆக்டின்படி கொடுக்கப்படுவது. | வாரன்டில் கண்டிருக்கிற பங்குகளின் நமோது தொகைக்குச் சரியான ஐவேஜுக்காக ஏற்பட்ட (21-வது நம்பா) ஒப்படைப்பத்திரத்துக்குண்டான தீர்வையில் ஒன்றரைப் பங்கு. |
| நிவாரணைகள்.<br>ஸ்டாம்ப் ரெவினியு கலெக்டரிடத்தில அந்தத் தீர்வைக்காக ஒழுங்கேற்பாடாய் தொகை செலுத்தப்படுவதன்மேல் மாத்திரம் செலாவணியாகவேண்டுமென்று 1913-ம் வருஷத்திய இந்துதேசத்து கம்பெனிகளைக்குறித்த ஆகட 43-வது பிரிவின்படி ஒரு கம்பெனியாரால் பங்கு வாரன்ட் பிறப்பிக்கப்படும்போது, (1913-ம் வருஷத்து 7-வது ஆக்ட்.)<br>எவ்வளவென்றால்—<br>(a) கம்பெனியின் கையொப்பஞ்செய்யப்பட்ட மொத்த மூலதனத்தில் நூற்றுக்கு ஒன்றரை வீதம்; அல்லது,<br>(b) மேல்சொன்ன தீர்வையையாவது காம்பொஸிஷன் தொகையையாவது பூரணமாய்க் கட்டிவிட்ட யாதொரு கம்பெனி அதற்கப்புறம் கையொப்பஞ்செய்யப்பட்ட அதன் மூலதனத்துக்கு யாதொரு உடன்சேர்க்கையைப் பிறப்பித்தால் அப்படி பிறப்பிக்கப்பட்ட உடன்சேர்க்கையான மூலதனத்தில் நூற்றுக்கு ஒன்றரை வீதம். | |
| 53. குத்தகை அல்லது வாடகை விடுதலைச்சீட்டு—<br>(a) குத்தகை அல்லது வாடகைச்சீட்டுக்குண்டான தீர்வை ஏழு ரூபாய் எட்டு அணுவுக்கு மேற்படாவிட்டால்;<br>(b) வேறு யாதொரு விஷயத்தில் ... ... ... ... | அந்த குத்தகை அல்லது வாடகைச்சீட்டுக்குண்டான தீர்வை.<br>ஏழு ரூபாய் எட்டு அணு. |
| நிவாரணை.<br>குத்தகை அல்லது வாடகைச் சீட்டுக்குத் தீர்வை நிவாரணையாயிருந்தால் அந்த குத்தகை அல்லது வாடகையைச் சேர்ந்த விடுதலைச்சீட்டு. | |
| 54. ட்ரான்ஸ்பர்.—(ஐவேஜு சகிதமாகவாவது ஐவேஜு இல்லாமலாவது)—<br>(a) யாதொரு சட்டப்படி ஏற்பட்ட கம்பெனியில் அல்லது ஒன்றாய்ச்சேர்ந்த வேறே கூட்டத்திலே உள்ள பங்குகள்: | பங்கின் மதிப்புக்குச் சரியான ஐவேஜுக்காக ஏற்பட்ட (21-வது நம்பர்) ஒப்படைப்பத்திரத்துக்குண்டான தீர்வையில் அரைப் பங்கு. |

1A ஷெட்யூல்—தொடர்ச்சி.

| இன்ன ஆதரவுகள். | சரியான முத்திரைத்தீர்வை. | |
|---|---|---|
| (b) 8-வது பிரிவினால் நிபந்தனை ஏற்பட்ட டிபென்சர்கள் தவிர, தீர்வைக்குட்பட்டிருந்தாலுஞ்சரி இல்லாவிட்டாலுஞ்சரி விற்பனைசெய்யத்தக்க பத்திரங்களாகிற டிபென்சர்கள் ; | டிபென்சரின் முகப்பில் காட்டியிருக்கும் தொகைக்குச் சரியான ஐவேஜுக்காக ஏற்பட்ட (21-வது நம்பர்) ஒப்படைப்பத்திரத்துக்குண்டான தீர்வையில் அரைப்பங்கு. | |
| (c) பாண்டிலாவது கொதுவைப்பத்திரத்திலாவது இன்ஷூரன்ஸ் பாலிஸியிலாவது ஏற்படுத்தியிருக்கிற யாதொரு சுதந்தரம்,—<br>(i) அப்படிப்பட்ட பாண்ட், கொதுவைப்பத்திரம் அல்லது பாலிஸியின் தீர்வை ஐந்து ரூபாய்க்கு மேற்படாவிட்டால்; | அப்படிப்பட்ட பாண்ட், கொதுவைப்பத்திரம் அல்லது இன்ஷூரன்ஸ் பாலிஸிக்குண்டான தீர்வை. | |
| (ii) வேறே யாதொரு விஷயத்தில் ... ... ... ... | ஏழு ரூபாய் எட்டு அணா. | |
| (d) 1913-ம் ௵த்து அட்மினிஸ்ட்ரேடர் ஜெனரலாக்ட் 25-வது பிரிவின்படி யாதொரு சொத்து ; | பதினைந்து ரூபாய். | 1913-ம் ௵த்து 3-வது ஆக்ட். |
| (e) ஐவேஜு இல்லாமல் ஒரு ட்ரஸ்டியினிடத்திலிருந்து வேறொரு ட்ரஸ்டியினிடத்திற்காவது யாதொரு ட்ரஸ்டியினிடத்திலிருந்து யாதொரு பெனிபிஷரியினிடத்திற்காவது செல்லுகிற யாதொரு ட்ரஸ்ட் சொத்து. | ஏழு ரூபாய் எட்டு அணா அல்லது இந்த பகுதியிலே (a) குறிப்பிட்ட பாகம் முதல் (c) குறிப்பிட்ட பாகம் வரையிலுள்ள பாகங்களின்படி அதற்குக் குறைவாக என்ன தொகை விதிக்கப்படலாமோ அந்தத் தொகை. | |
| **நிவாரணைகள்.**<br>எண்டார்ஸ்மெண்ட் மூலமாய் ட்ரான்ஸ்பர்கள் செய்வது—<br>(a) பில் ஆவ் எக்ஸ்சேஞ்ஜ் - செக் அல்லது ப்ராமிஸொரி நோட்டை ;<br>(b) பில் ஆவ் லேடிங் என்னும் வார்நாமா, டெலிவரி ஆர்டர், சரக்குவாரண்ட் அல்லது சரக்குக்குள்ள ஹக்கின் இதரமான வர்த்தகப் பத்திரத்தை ;<br>(c) இன்ஷூரன்ஸ் பாலிஸியை ;<br>(d) இந்தியா கவர்ன்மெண்ட் பத்திரங்களை.<br>8-வது பிரிவையும் பார்க்க. | | |
| 55. **குத்தகை அல்லது வாடகைச்சீட்டை ட்ரான்ஸ்பர் செய்தல்.**—<br>சாட்டுதல் பத்திரத்தினாலன்றிக் கீழ்க்குத்தகையினால் அல்ல. | ட்ரான்ஸ்பர் ஐவேஜு தொகைக்குச்சரியான ஐவேஜுக்காக ஏற்பட்ட (21-வது நம்பர்) ஒப்படைப் பத்திரத்துக்குண்டான தீர்வை. | |
| **நிவாரணை.**<br>தீர்வையிலிருந்து நிவாரணை செய்யப்பட்டிருக்கிற யாதொரு குத்தகை அல்லது வாடகைப்பத்திரத்தை ட்ரான்ஸ்பர் செய்தல். | | |
| 56. **ட்ரஸ்ட்**,—<br>A.—**ட்ரஸ்ட் உறுதிமொழிப்பத்திரிகை.**—யாதொரு சொத்தையாவது அதைப்பற்றியாவது உயில் அல்லாமல் வேறே யாதொரு எழுத்து மூலமாய்ச் செய்யப்பட்டால். | ஆதரவில் கண்டிருக்கிறபடி அதில் சம்பந்தப்பட்ட தொகை அல்லது சொத்தின் மதிப்புக்குச் சரியான தொகைக்காக ஏற்பட்ட (15 வது நம்பர்) பாட்டம்ரி பாண்டுக்குண்டான தீர்வை ; ஆனால், இருபத்திரண்டு ரூபாய் எட்டு அணாவுக்கு மேற்படக்கூடாது. | |
| B.—**ட்ரஸ்ட் ரத்து**—யாதொரு சொத்தையாவது அதைப்பற்றியாவது உயிலல்லாத வேறே யாதொரு ஆதரவினால் ரத்துசெய்யப்பட்டால். | ஆதரவில் கண்டிருக்கிறபடி அதில் சம்பந்தப்பட்ட தொகை அல்லது சொத்தின் மதிப்புக்குச் சரியான தொகைக்காக ஏற்பட்ட (15-வது நம்பர்) பாட்டம்ரி பாண்டுக்குண்டான தீர்வை; ஆனால், பதினைந்து ரூபாய்க்கு மேற்படக்கூடாது. | |
| (51-வது நம்பர்) பொருத்தத்தையும் பார்க்க.<br>**மதிப்பு நிர்ணயம்.**—(8-வது நம்பர்) கிரயமதிப்பைப் **பார்க்க.**<br>**வக்கில்.**—(27-வது நம்பர்) வக்கீலாகச் செய்யப்பட்ட பதிவைப் **பார்க்க.** | | |
| 57. **சரக்கு வாரண்ட்**, அதாவது - அதில் கண்டிருக்கிற யாதொரு நபருக்காவது அவருடைய சாட்டுதலைக்காரர்களுக்காவது அதை வைத்துக்கொண்டிருக்கிறவருக்காவது, **கப்பல் செப்பனிடும்** துறையிலாகிலும் கிடங்கிலாகிலும் செய்கரையிலாகிலும் இருக்கிற சரக்கிலுள்ள சொத்துடைத்துக்கு உண்டாயிருக்கிற ஹக்கைத் தெரிவித்து, அந்தசரக்கு எவருடைய வசத்திலிருக்குமோ அந்த நபராலாவது அவர் பட்சத்திலாவது கையெழுத்து செய்யப்பட்டாகிலும் ஸொர்டிசெய்யப்பட்டாகிலும் இருக்கிற ஆதரவு. | ஆறு அணா. | |

## இந்த மசோதா ஆக்ட் பிறப்பதற்குண்டான ஹேதுக்களும் நோக்கங்களும்.

மாகாண வருமானத்தில் ஏற்பட்டிருக்கும் குறைவில் ஒரு பாகத்தைச் சரிப்படுத்தும் பொருட்டு சென்னை ராஜதானிக்கு அதிகப்படியான வருமானம் கிடைக்கும்படிச் செய்வதே இந்த மசோதா ஆக்டின் நோக்கமாகும். இந்த மசோதா ஆக்டில் கண்டிருக்கிறபடி முத்திரைத் தீர்வை விதங்களை மாற்றி மேலே கண்டபடி செய்ய உத்தேசித்திருக்கிறது.

### பகுதிகளைப்பற்றிய குறிப்புகள்.

பகுதிகள் 1, 2.—இந்த மசோதா ஆக்டிற்கண்ட நிபந்தனைகளை சென்னை ராஜதானிக்குப் பிரயோகப்படும்படி செய்து, 1899-வருஷத்திய இந்துதேசத்து முத்திரைக் கடுதாசி ஆக்டை இந்த மசோதா ஆக்டின் மிகுதியாயிருக்கும் நிபந்தனைகளைக்கொண்டு திருத்துவதற்கு இந்தப் பகுதிகளில் நிபந்தனை கண்டிருக்கிறது.

பகுதிகள் 3, 5, 6.—4-வது பகுதி காரணமாக இவை ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

பகுதி 4.—இந்தப் பகுதியில் கண்டிருக்கும் ஆதாரவுகளுக்கு, அதாவது 1 A ஷெட்யூலில் கண்ட தீர்வை விதங்கள் விதிக்கப்படத்தக்கவையாகும் ஆதாரவுகளுக்கு, அவை அந்த ஷெட்யூலில் சேர்க்கப்பட்டிருப்பதன் காரணமாகவும் அவை சென்னை ராஜதானியில் எழுதப்படுவது கைமாறிச் செல்லும்படி செய்யப்படுவது அல்லது வரப்பற்றிக்கொள்ளப்படுவது காரணமாகவும் 1 A ஷெட்யூலில் சொல்லியிருக்கும் தீர்வைகள் பொதுவாய்ப் பிரயோகப்படும்படி இந்தப் பகுதியில் செய்திருக்கிறது.

பகுதி 8.—ஒரு ஆதாரவுக்கு ப்ரிடிஷ் இந்தியாவின் வேறொரு பாகத்தில் 1-வது ஷெட்யூலின்படி தீர்வை விதிக்கப்படத்தக்கதாயிருந்து, பிற்பட்டு அது சென்னை இராஜதானியில விதிக்கப்படும் தீர்வை செலுத்தப்படுவதற்குள்ளாகும் பட்சத்தில், அப்படிப்பட்ட ஆதாரவு விஷயமாய் இந்த மசோதா ஆக்டின்படி செலுத்தவேண்டிய தீர்வையானது 1A ஷெட்யூலில் கண்டிருக்கிறபடி சென்னை ராஜதானியில் விதிக்கப்படும் தீர்வையிலிருந்து ப்ரிடிஷ் இந்தியாவில் வேறே இடத்திலே ஏற்கனவே செலுத்தப்பட்டிருக்கும் தீர்வைத் தொகையைக் கழித்துவரும் தொகையாகுமென்று இந்தப் பகுதியில் நிபந்தனை கண்டிருக்கிறது. 1-வது ஷெட்யூலின்படி விதிக்கப்படத்தக்க முழுத்தீர்வை எந்த ஆதாரவுகளுக்கு ஏற்கனவே செலுத்தப்பட்டிருக்கிறதோ அந்த ஆதாரவுகளின் விஷயத்தில் இந்த விதி பிரயோகிக்கப்படுவதுமல்லாமல், எந்த ஆதாரவுகளுக்கு ஷை தீர்வை செலுத்தப்படவேண்டியதாயிருந்தும் செலுத்தப்படாமலிருக்கிறதோ அந்த ஆதாரவுகளின் விஷயத்தில் கூட அது பிரயோகிக்கப்படுகிறது. 32-வது பிரிவைச் சேர்ந்த (3) குறிப்பிட்ட உட்பிரிவின் விலக்கு நிபந்தனையில் கண்ட (b) அடையாளமிட்ட பகுதியில் எண்டார்ஸ்மெண்டுகளின் விஷயத்தில் சொல்லியிருக்கும் மூன்று மாத கால அளவானது - ஷை உட்பிரிவின் விலக்கு நிபந்தனையில் கண்ட (c) அடையாளமிட்ட பகுதியின்படி விலக்கப்பட்டிருந்தாலொழிய, மேலே கண்டபடி தீர்வை விதிக்கப்படத்தக்க சகல ஆதாரவுகளின் விஷயத்திலும் பிரயோகப்படுகிறது. மற்றப்படி அந்த ஆதாரவுகள் - ப்ரிடிஷ் இந்தியாவுக்கு வெளியில் எழுதி அவைகளுக்கு சென்னை ராஜதானியில் விதிக்கப்படும் தீர்வை விதிக்கும்படி ஏற்பட்டபோது முதல் தடவையாய் ப்ரிடிஷ் இந்தியாவில் வரப்பெற்றுக்கொள்ளப்பட்டதாக பாவிக்கப்படுவதுமல்லாமல், ஷை விலக்கு நிபந்தனையின் (a) அடையாளமிட்ட பகுதியில்கண்ட மேற்சொல்லியவைகளைக் காட்டிலும் அதிக கண்டிப்பான நிபந்தனைகளினின்று அவை நிவாரணையும் செய்யப்படும்.

பகுதிகள் 9, 10, 11.—23-A 24, 29-வது பிரிவுகளில் கண்ட நிபந்தனைகளை 1A ஷெட்யூலில் சொல்லியிருக்கும் அவைகளுக்குப் பொருத்தமான ஆதாரவுகளுக்குப் பிரயோகப்படும்படி செய்வதற்காக, இந்தப் பகுதிகள் மூலமாய்க் கிரமாசாரமான சில மாறுதல்கள செய்யப்பட்டிருக்கின்றன.

பகுதிகள் 7, 12, 13, 14, 15.—முன்னே ஒரு அணா தீர்வை விதிக்கப்படத்தக்கவையாயிருந்து இந்த மசோதா ஆக்டில் கண்ட நிபந்தனைகளின்படி சென்னை ராஜதானியில் இரண்டணா தீர்வை விதிக்கப்படத்தக்கவையாக்கப்பட்ட ஆதாரவுகளுக்குச் செலுத்தவேண்டிய தீர்வை விஷயமாய் இப்போது அனுசரிக்கப்படும் நடவடிக்கை முறையை அப்படியே வைத்துக்கொள்வதற்காக இந்தப் பகுதிகளில் நிபந்தனை கண்டிருக்கிறது.

பகுதி 16.—இந்தப் பகுதி மூலமாய் 1 A ஷெட்யூலை நூதனமாகச் சேர்த்திருக்கிறது. 3-வது பிரிவைச்சேர்ந்த புதிய விலக்கு நிபந்தனையின் வியாபகத்தில் அடங்கும் வெவ்வேறு வகையான ஆதாரவுகளுக்கு சென்னை ராஜதானியில் விதிக்கப்படத்தக்க தீர்வைத் தொகை விஷயமாய் பூர்த்தியான நிபந்தனைகள் இந்த ஷெட்யூலில் அடங்கியிருக்கின்றன.

இந்த ஷெட்யூலில், அடியிற் கண்டவைகளைத் தவிர, தீர்வை விதிக்கப்படத்தக்கவையென்று 1-வது ஷெட்யூலில் கண்டிருக்கும் சகலவகைகளையும் சேர்ந்த ஆதாரவுகளைப்பற்றி சொல்லியிருக்கிறது :—

(13-ம் நெ.) பில் ஆவ் எக்ஸ்சேஞ்சுகள், (19-ம் நெ.) ஸெர்டிபிகேட், (28-ம் நெ.) சரக்கை ஒப்பித்துக்கொள்வதற்கான உத்தரவு, (36-ம் நெ.) பங்குகள் ஏற்படுத்திக் கொடுப்பதற்

கான சீட்டு, (37-ம்நெ.) லெட்டர் ஆவ் க்ரெடிட் (நம்பிக்கைச்சீட்டு), (47-ம்நெ.) இன்ஷூரன்ஸ் பாலிஸி என்னும் நஷ்ட விமோசன சாஸனம், (52-ம்நெ.) ப்ராக்ஸி (பிரதி காரியஸ்தருக்குக் கொடுக்கிற அதிகாரபத்திரம்), (60-ம்நெ.) ஷிப்பங் ஆர்டர்.

பில் ஆவ் எக்ஸ்சேஞ்சுகள் விஷயமாகவும் இன்ஷூரன்ஸ் பாலிஸிகள் விஷயமாகவும் இந்தியா முழுவதுக்கும் பிரயோகப்படும்படி சட்டநிருபணம் செய்யும்படியாக இந்தியா கவர்ன்மெண்டாருக்கு ஆலோசனை சொல்லப்படுகிறது.

1922-ம்௵ பெப்ரவரி௴ 6௳. மஹம்மத் ஹபிபுல்லா.

---

ஆர். ராமசந்திர ராவ்,

கவர்ன்மெண்ட் ஸெக்ரெடரி,
லா (லெஜிஸ்லெடிவ்) டிபார்ட்மெண்ட்.

(A true translation)

C. N. SARAVANA MUDALIYAR,
*Tamil Translator to Government.*

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.